Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ கார்த்திகை 8 ஆம் நாள் ஜ. ஆகிர் 14 (23-11-61) வியாழக்கிழமை இதழ் 241

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

# மொழிக் கொள்கை

## இலாகாக்களில் எப்படி அமுலாகிறது ?

### மூவர் குழு அமைக்க நீதி அமைச்சு உத்தரவு

கொழும்பு, புதன்

அரசாங்க இலாகாக்களில் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை அமுல் நடத்துவது சம்பந்தமாக மேற்பார்வை செய்யவும், மொழிக் கொள்கையை அமுல் நடத்துவதில் உள்ள கஷ்டங்களை அறிவிக்கவும் இலாகாக்களில் அரசாங்க மொழிக் கொள்கையை அமுல் நடத்துவதிலுள்ள கஷ்டங்களெதையும் விசாரணை செய்வதற்கு உத்தியோக மொழிக் கமிஷனருக்கு உதவி புரிவதற்கும் அரசாங்க இலாகாக்களில் மூன்று அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றை நியமிக்கும்படி இலாகாத் தலைவர்களை நீதி அமைச்சு கேட்டுள்ளது.

அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை அமுல் நடத்துவதற்கு இலாகாக்களில் ஏதாவது கஷ்டங்களிலிருந்தால் அவற்றை ஆராய்ந்து அக்கஷ்டங்களைத் தீர்க்கக்கூடிய வழிவகைகளை இலாகாத் தலைவர்களுக்குத் தெரிவிக்கும்படி உத்தியோக மொழிக் கமிஷனருக்கு நீதி அமைச்சு [illegible]

அமுல் நடத்துவதில் உள்ள முன்னேற்றம் அல்லது அதிலுள்ள கஷ்டம் அல்லது மொழிக் கொள்கையை அமுல் நடத்துவதனால் ஏற்பட்ட கஷ்டம் ஆகியவை பற்றிப் பொது மக்கள் அல்லது அரசாங்க ஊழியர் அல்லது அரசாங்க ஊழியர் சங் [illegible]

## இலட்சுமித் தோட்ட விசாரணை; திரு. சண்முகம் சாட்சியம்

கொழும்பு, புதன்

இலட்சுமி தோட்ட விசாரணை இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஓய்வுபெற்ற அரசாங்க பரிசோதகர் திரு. டபிள்யு. ஆர். சண்முகம் இ. தொ. கா. சிரேஷ்ட வழக்கறிஞர் திரு ஜி. ஜி. பொன்னம்பலத்தினால் விசாரணை செய்யப்பட்டார்.

திரு. சண்முகம் சாட்சியமளிக்கையில் இவ்வழக்குடன் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்களின் உத்தரவுப்படி "12" அளவு துப்பாக்கியில் நான்காம் இலக்க காட்ரிட்ஜுகள் போட்டு பரீட்சைசெய்து பார்த்ததாகத் தெரிவித்தார். பல விதமான தூரங்களிலிருந்து சுட்டுப் பரீட்சை செய்ததாக அவர் தெரிவித்தார். இதற்கு ஆதாரமாகத் தாம் சுட்டுப் பரீட்சித்த 'காட்போட்' அட்டைகளையும் மரப்பலகைகளையும் அவர் விசாரணைமன்றத்தில் எடுத்துக் காட்டினர்.

கூட்டத்தினர் இருந்த இடத்திலிருந்து சுமார் நான்கு அல்லது ஐந்து அடிகள் தூரத்திலிருந்து கூட்டத்தினர்மீது சுட்டதாகக் கருணாதிலகா கூறிய சாட்சியத்தை தாம் நிராகரிப்பதாகத் திரு. சண்முகம் கூறினர்.

தனது அனுபவத்திலிருந்தும் தாம் நடத்திய பரீட்சையிலிருந்தும் மிகவும் சமீபத்திலிருந்து சுடப்பட்டிருந்தால் தோல் எரிந்திருக்கக் காணப்படும் என்று திரு. சண்முகம் கூறினர். ஆனல் இந்தச் சம்பவத்தில் அப்படித் தோல் எரிந்த அடையாளம் எதுவு

(8ம் பக்கம் பார்க்க)

## ககாரின் 7ந் திகதி வருகிறர்

கொழும்பு, புதன்

சோவியத் யூனியனின் முதலாவது வானவெளி வீரர் மேஜர் யூரி ககாரின் டிசம்பர் மாதம் 7ந் திகதி கொழும்பு வந்து சேர்வார்.

இலங்கையில் ஆறு தினங்கள் தங்கவிருக்கும் அவர் யாழ்ப்பாணம், இரத்தினபுரி, அம்பாறை ஆகிய இடங்களுக்கும் அவர் விஜயம் செய்வார். 11ந் திகதி பத்திரிகை நிருபர்களை அவர் கொழும்பில் சந்தித்துப் பேசுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கவர்னர் ஜெனரல், பிரதம மந்திரி ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேசுவார்.

## எப். ஆர். ஸி. எஸ். பரீட்சைக்கு 47 பேர் தோற்றுவர்

கொழும்பு, புதன்

47 இலங்கை டாக்டர்கள் லண்டன் வைத்தியக் கல்லூரியினல் நடத்தப்படும் எப். ஆர். ஸி. எஸ். ஆரம்ப பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தமது விண்ணப்பங்களை அனுப்பியுள்ளார்கள். ஜனவரியில் நடைபெறும் இப்பரீட்சை, இலங்கை மாணவருக்கு இலங்கையிலேயே நடத்தப்படும்.

பரீட்சையை நடத்துவதற்கு வழக்கம் போல இங்கிலாந்திலிருந்து பேராசிரியர்கள் இங்கு வருவார்கள்.

## உதவி நிதி அமைச்சர் ராஜினமா

கொழும்பு, புதன்

உதவி நிதி மந்திரி திரு. ஜோர்ஜ் ராஜபக்ஷ தமது பதவியை ராஜினமாச் செய்து விட்டார்.

## "விளக்குகள் பலவானலும் வெளிச்சம் ஒன்றே"

### மனித குடும்ப ஒற்றுமைக்குப் பாடுபட வேண்டும்

— டாக்டர் ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, நவ. 21

மனிதர்க்கு மனிதர் வேற்றுமைப் படுத்துவதில்லையென்றும், மனித குடும்பத்தை பிரிக்க்கூடிய எந்தக் காரியத்தையும் செய்வதில்லை என்றும் மக்கள் ஒவ்வொருவரும் உறுதிகொள்ள வேண்டும். என்றிவ்வாறு இந்திய உதவி ஜனதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டார். சீக்கியரின் மதகுருவான நானக் அவர்களின் ஜயந்தியைச் சீக்கியர்கள் டில்லியில் கொண்டாடும்போது அவர் இவ்விதம் கூறினர்.

டாக்டர் ராதா கிருஷ்ணன் மேலும் குறிப்பிட்டதாவது:-

குரு நானக் நாட்டின் ஒற்றுமைக்காகப்பாடுபட்டார். அவர் இயற்றிய கீதங்கள் மனித குடும்ப ஒற்றுமையை வலியுறுத்துகின்றன. இந்துக்களையும் முஸ்லிம்களையும் இணைப்பதில் அவர் பெரும் பங்கெடுத்தார்.

இன்று மதம் என்பது வெறும் சடங்குகளும் சம்பிரதாயமுமாக இருக்கின்றது. சமயச்சார்புள்ளவரை அவர் செய்யும் காரியமூலம் தெரிந்துகொள்ள வேண்டுமேயன்றி அவரது வெறும் பேச்சினலோ நம்பிக்கையினலோ அல்ல, கோவிலுக்குப் போவதால்மட்டும் ஒருவர் சமயத்தைக் கடைப்பிடித்தவராகார். ஞானமும், உள் ஒளியும் பெறவேண்டிய சமத்தின் முக்கிய பலனகும். இன்று நாட்டிலே சச்சரவுகளும் சமயத்துக்குமாறன போக்குகளும் இருக்கின்றன. இது வருந்தத்தக்கது. குரு நானக் போன்ற ஞானிகளின் உபதேசத்துக்கு மாறக மக்கள் நடக்கின்றர்கள். இது நடப்பது துரதிஷ்டவசமாகும். உண்மையான மதநெறிப்படி நடப்பதன்மூலம்தான் பல சமூகத்தவரையும் ஒன்றுபடுத்த முடியும்.

இந்தியாவிலேயே பல சமூகங்களிலும் பெரியோர்கள் இருந்திருக்கிறர்கள். ஆனல் அவர்களது உபதேசங்களெல்லாம் ஒன்றேயாகும். விளக்

(4 பக்கம் பார்க்க)

## 3000 தொழில்தகராறு வழக்குகள் விசாரணைக்காககாத்திருக்கின்றன

கொழும்பு, புதன்

தொழிற்தகராறு மத்தியஸ்த சபைகள்முன் மூவாயிரத்துக்கு மேற்பட்ட தொழில் தகராறுகள் விசாரணையை எதிர்பார்த்துக் கிடக்கின்றன.

இந்தவழக்கு விசாரணைகளை கேட்ட மத்தியஸ்த சபைத்தலைவர்கள் ஆறுபேர்கள்தான் உள்ளனர். உத்தியோகத்தர்களும் போதிய அளவுமில்லை. சராசரி தினசரி 20 தொழிற் தகராறு வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இப்பொழுதுள்ள நிலைமையில் தொழிற்தகராறு வழக்கொன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவது குறைந்தது ஒன்பது மாதங்களாகலாம் என்று தொழில் இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தனியார் துறையிலுள்ள ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்படுவது சம்பந்தமாகவும இதர முதலாளி - தொழிலாளி சில்லறைத் தகராறுகளும் தொழில் மத்தியஸ்த சபைமுன் விசாரணைசெய்யப்படும். வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர் எவரும் தொழில் மத்தியஸ்த சபைக்கு மனுச்செய்து கொள்ளலாம்.

## தேசியசேவை தலைமை பிரதமரே ஏற்பார்

கொழும்பு, புதன்

தேசிய சேவை குழு சிபார்சு செய்துள்ளது போல் தேசிய சேவைத் திட்டத்தின் தலைமைப் பொறுப்பைத் தாமே நேரடியாக ஏற்றுக்கொள்வதென்று பிரதமர் சிறிமா தீர்மானித்துள்ளார்.

## சகல பட்டதாரிகளுக்கும் கட்டாய அரசாங்க சேவை

கொழும்பு, புதன்

சகல பட்டதாரிகளும் கட்டாய அரசாங்க சேவைக்கு அருகதையுடையவர்களென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கு முன்னர் தயாரிக்க உத்தேசிக்கப்பட்ட புதிய சட்டத்தின்படி தொழில்நுட்ப நிபுணர்களும் வைத்திய அதிகாரிகளும்தான் கட்டாய அரசாங்க சேவைக்கு அருகதையுடையவர்களென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இப்பொழுது தீர்மானிக்கப்பட்டுவரும்புதிய நகல்மசோதாவில் இலங்கை சர்வகலாசாலையில் விஞ்ஞானம், வைத்தியம் இலக்கியம் ஆகிய எந்தப் பிரிவில் சித்திபெற்று வெளியேறும் பட்டதாரிகளும் கட்டாய அரசாங்க சேவைக்கு உரியவர்கள் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மசோதா விரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

## அறிவித்தல்

அகில இலங்கை பெனிவிற் இன்சூரன்ஸ் கம்பெனி 33 A, மேல்மாடி ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் இருந்த காரியாலயம் 320, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

---

## மாணவத் தாதிகள் தேவை

**தராதரங்கள்**

1. விவாகமாகாத பெண்கள்
2. வயது 16-25
3. ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.

தராதரப்பத்திரம், பிறப்புப் பத்திரம், இரு புதிய நற் சாட்சிப் பத்திரங்களினது பிரதிகளுடனும் 29-11-61 முற்பகல் 10 மணிக்குக் கிடைக்கக் கூடியதாக கீழ்க்கண்ட விலாசத்துக்குவிண்ணப்பிக்கவும். காரியதரிசி கூட்டுறவுவைத்தியசாலை, மூளாய், சுளிபுரம். 21-11-61.

---

## விற்பனைக்கு

நல்ல நிலைமையில் CY தொடர் இலக்கமுடைய "சவலெட்" லொறியும் CE தொடர் இலக்கமுடைய சவலெட் லொறியும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: கே கார்த்திகேசு, ஐந்து முச்சந்தி மரக்காலை, யாழ்ப்பாணம்.

---

# மடங்கள் இடமாற்றம்: பதுளையில் ஆட்சேபம்

பதுளை, புதன்

அரசாங்க நகர அமைப்பாளர் வெளிப்படுத்திய அறிவித்தற்பிரகாரம் கதிர்காமத்திலுள்ள மடங்களை மாணிக்க கங்கைக்கு அப்புறமாக அகற்றுவதென அரசாங்கம் செய்துள்ள முடிவை பதுளை ஸ்ரீ மாணிக்கவிநாயகர் கதிர்வேலாயுத சுவாமி கோவில் முகாமைக் குழுவினர் வன்மையாக ஆட்சேபிக்கின்றனர். கதிர்காமத்தைப் புனிதநகராக்குவதைக் குழு மனமார ஒப்புக்கொள்ளுகிறது. அதற்காக அங்குள்ள கடைகள் முதலியன அகற்றப்படவேண்டிய ஒழுங்குகள் செய்யப்படலாம். மடங்கள் அகற்றப்படவேண்டியதில்லை. அம்மடங்கள் கோவிலின் ஒருபகுதியேயன்றிப் புறம்பானவையல்ல; அவை உண்மையில் மடாலயங்களே. தெய்வத்தன்மை சிறந்த கதிர்காமத்தின் சூழலைத் தெய்வத்தன்மையாக்குவன அம்மடங்களே. பண்டைக் காலத்தில் பக்தி நிறைந்த அடியார்களினால் முருகனருள் வன்மையாற் கட்டப்பட்டன. திருவிழாக் காலங்களிலும் ஏனைய முக்கிய தினங்களிலும் திருக்கோவிலில் முருகப்பெருமானின் பூசை ஆராதனைகளை நேரிற் காணும் பேறு பெருத பல அடியார்கள் இம்மடங்களில் நடைபெறும் பூசைகள்மூலம் அவ்வருளைப் பெறுகின்றனர். ஆகவே மடங்களை இடிப்பது ஓர் இந்துக்வுக்கு கோவிலை இடிப்பது போலவே இருக்கும். இதனை அவனுற் சகிக்க முடியாது. இக்காரணங்களைக் கொண்டு அம்மடங்களை அகற்ற வேண்டாம் என்று இக்குழு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது. சமய விஷயங்களிலும் நடுநிலைமைக் கொள்கையை அனுட்டிப்பதாகக் கூறிக்கொள்ளும் அரசாங்கம் இவ்வேண்டுகோளை நிச்சயமாக ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்னும் ஓர் தீர்மானம் பதுளை ஸ்ரீ மாணிக்க விநாயகர் கதிர்வேலாயுத சுவாமி கோயில் முகாமையாளர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கதிர்காமத்து மடங்களை அகற்றுதல் சம்பந்தமாக அரசாங்கம் செய்த முடிவை ஒரே முகமாக எதிர்ப்பதற்காக அகில இலங்கையிலுமுள்ள இந்துசமய ஸ்தாபனங்களினதும் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு மகாநாட்டைக் கதிர்காமத்திற்கூடிஅவ் வெதிர்ப்பை அரசாங்கத்திற்கு அறிவிக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி இவ்விஷயமாகஊக்கமெடுத்துவரும் திரு. ஸ்பென்ஸர் இராசிரத்தினம் போன்றவர்களை இக்குழு வேண்டிக்கொள்கிறது என்னும் தீர்மானமும் அங்கு நிறைவேற்றப்பட்டது.

---

# நிலவளத்தைப் பாதுகாக்க சபை நியமிக்கப்படும்

## மந்திரி அறிவிப்பு

கொழும்பு, செவ்வாய்

இலங்கையின் இயற்கையான நிலவளங்களைப் பாதுகாக்கும் நிமித்தம், காணிபரிபாலனம்பற்றி ஆராய்வதற்கென ஒரு சபையை வெகு விரைவில் அரசாங்கம் நியமிக்கவிருக்கிறது. தேச இயற்கை வளம் பற்றி நடைபெற்று வரும் ஒரு வார மகாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் காணி விவசாய நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி' சில்வா அரசாங்கத்தின் இந்த நோக்கம்பற்றிக் கூறினர்.

தலைவர் திரு. சி. எஸ். சமரவீரா பேசுகையில் கூறியதாவது:—

"எமது முன்னேர்கள்மேட்டு நிலப் பகுதிகளில் ஆற்றுநீரைச் சேகரித்து வைத்து, அதனால் நிலத்தை வளமுடையதாக வைத்திருந்தார்கள். எமது முன்னேர்களுடைய விவசாய முறைகள் எமது முறைகள் போலத் திறமை வாய்ந்தனவாக இருந்திருக்கமுடியாது. ஆனல் நிலத்தின் வளத்தை அவர்கள் செழிப்புள்ளதாக வைத்திருந்தார்கள். இதனலேயே நாரீகமும் வளர்ந்தது."

"இப்போது பயிரிடப்பட்டுள்ள நிலத்திலிருந்து எமது முன்னேர் பெற்ற வருமான மளவு நாம் பெற்றுக்கொள்வது மிகவும் சந்தேகமானதே. எமது ஆறுகள் ஊற்றெடுக்கும் பகுதிகளிலுள்ள நிலங்கள் அரிக்கப்பட்டுள்ளன. ஆறுகள் மண்ணை வாரிவந்து, அம்மண் பின்னர் ஆற்றின் முகவாய்கள் அடைக்கப்பெற்றுள்ளன. இதனல் சதுப்பு ஏற்பட்டு வருடாந்தம் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. இதற்கு உடனடியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் பெருநஷ்டம் ஏற்படும்."

---

## பண்டாரநாயக்கா கொலைவழக்கு

### இன்று நிருபர்கள் விசாரணை

கொழும்பு, செவ்வாய்

பண்டாரநாயக்கா கொலை வழக்கில் நீதியரசர் டி. எஸ். பெர்னண்டோ முன்னிலையில் வழக்கறிஞர் ஜி. ஈ. சிட்டி நிகழ்த்திய ஆரம்பஉரை சம்பந்தமாக பத்திரிகைகளில் செய்தி வெளியிட்ட நிருபர்களை விசாரிக்க வேண்டுமென்று அப்பீல் நீதிமன்றத்தில் புத்தரகித்தாவின் சார்பில் வாதாடும் வழக்கறிஞர் ஈ. ஜி. விக்கிரமநாயக்கா, கி. யு. ஸி. யின் கோரிக்கையை அப்பீல் நீதிமன்றம் நேற்றுஏற்றுக்கொண்டது.

நிருபர்கள் இன்று அப்பீல் நீதிமன்றத்தில் திரு. விக்கிரமநாயக்காவினுல்விசாரணைசெய்யப்படுவர்.

---

மாஸ்கோ, நவ. 21

அணுஆயுத் பரீட்சைகளைத் தடைசெய்வது சம்பந்தமாக மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென்ற மேற்கு அரசுகளின் யோசனைக்கு சோவியத் யூனியன் சம்மதம் தெரிவித்துள்ளது.

---

# 21-வது கூப்பன்

## கணக்கெடுப்பு ஜூன் மாதம்

கொழும்பு, செவ்வாய்

உணவுப் பங்கீட்டுப் புத்தக விநியோகம்சம்பந்தமான ஜனக் கணக்கெடுப்பு 1962ம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி நடைபெறுமென தற்காலிகமாகத் திட்டமிடப்பட்டுள்ளது. இக் கணக்கெடுப்பு உணவிலாகாவினுல்விநியோகிக்கப்படும்21வது வரிசை உணவும் பங்கீட்டுப் புத்தகத்திற்கு உரியதாகும்.இக் கணக்கெடுப்பு சம்பந்தமான இறுதி முடிவு செய்யப்படும் வரை 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் ஏழு மாதங்களுக்குரிய உபஉணவுப் பங்கீட்டுப் புஸ்தகத்தை உணவு இலாகா வழங்கும்.

---

## கதிர்காமத்துக்கு விசேஷ பஸ் சேவை

கொழும்பு, செவ்வாய்

இலங்கைப் போக்குவரத்துச்சபை பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்று பின்வருமாறு கூறுகிறது:—

கதிர்காமத்தில் நவம்பர் 21, 22, 23ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் திருவிழாக்களை முன்னிட்டு கதிர்காமத்துக்கு ஒரு பிரத்தியேக பஸ் போக்குவரத்துச் சேவை அமைக்கப்படும். திஸா-கதிர்காமம், வெள்ளவாயா-திஸா மாத்தறை-திஸா ஊடாக இந்த விசேஷ பஸ் போக்குவரத்து நடாத்தப்படும்.

ஹாக்மனுவிலிருந்து வலஸ்முலா, கட்டுவான, மீதெனியா, குன்கமா ஊடாக திஸாவுக்கு ஒரு விசேஷ பஸ் போக்குவரத்து ஏற்படுத்தப்படும். கதிர்காமத்திலிருந்து மாத்தறை புகையிரத நிலையம் செல்வதற்கும் பஸ் வசதிகள் செய்யப்படும்.

---

## சர்வகலாசாலை குத்துச் சண்டைப் போட்டி

### தடை புனராலோசனை

கொழும்பு, செவ்வாய்

சர்வககாசாலையில் குத்துச் சண்டைப் போட்டிக்கு விதிக்கப்பட்டுள்ள தடை புனராலோசனைசெய்வதென்று இலங்கை சர்வகலாசாலை கோர்ட் தீர்மானித்துள்ளது.

---

# "அணு ஆயுத சோதனையை நிறுத்த வேண்டியது அவசியம்"

## புதுடில்லி நகரசபை வரவேற்பில் ஜப்பானியப் பிரதமர் பேச்சு

புதுடில்லி, நவ. 21

'உலகில் அணுகுண்டு அனுபவத்தை ஜப்பானிய மக்களே முதலில் பெற்றனர். இதுவே உலகில் முதல் அனுபவமாகவும் கடைசி அனுபவமாகவும் இருந்துவிடட்டும் என ஜப்பானிய பிரதமர் திரு. இக்கேடா டில்லி செங்கோட்டையில் நகரசபையினர் அளித்த வரவேற்பில் கலந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:

அணுகுண்டு சோதனையை உடனடியாக நிறுத்துவதற்கு உழைப்பதென ஜப்பானும் பாரதமும் ஒப்பந்தம் செய்து கொண்டு இதை உலகுக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

சமீப காலங்களில் வல்லரசுகள் நடத்தி வரும் அணுகுண்டு பரிசோதனைகள் ஏமாற்றமும் ஆத்திரமும் அளிப்பதாகவுள்ளது.

உலக சமாதானத்தை வளர்க்க உலக நாடுகள் உறவு கொண்டு உழைக்கவேண்டும்.

---

## தேர்தல் கமிஷனர்

கொழும்பு, புதன்

தேர்தல் கமிஷனர் எந்த அமைச்சுக்கும் கட்டுப்பட்டவராக இனி இருக்கமாட்டார். ஆடிட்டர் ஜெனரல் போன்று தேர்தல் கமிஷனரும் தமது கடமையைச் செய்வார். பார்லிமெண்டின் நேரடியான பொறுப்பில்தான் தேர்தல் கமிஷனர் பணியாற்றுவார். தேர்தல் கமிஷனரை பதவியிலிருந்து நீக்குவதானல் பார்லிமெண்டில் ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றுவதன் மூலமே பதவி நீக்கம் செய்யப்படவேண்டும்.

ஆனல் வாக்காளர் ஜாபிதா திருத்துவது, வாக்காளர் பதிவு, வாக்குப் பதிவுநிலையங்களுக்கான நஷ்டஈடு செலுத்துவதில் உள்ள சச்சரவுகளைத் தீர்ப்பதுபோன்ற விஷயங்கள் உள்நாட்டு கலாசார கைத்தொழில் அமைச்சின் கீழேயே தொடர்ந்திருந்துவரும்.

---

## ஆதாரத்துடன் நிரூபிக்கவும்

### தேரோ சவால்

கொழும்பு, செவ்வாய்

புத்தபிரான் இலங்கைக்கு ஒரு போதும் விஜயம் செய்யவில்லை என்ற கூற்றை நிரூபிக்கும்படி முன்னுள் புதை பொருள் இலாகா அதிபர் டாக்டர் எஸ். பரணவித்தானைக்கு வித்தியோதய பல்கலைக்கழக உப அத்யட்சகர் வண. கலுகொண்டயாவ பிரஞாசேகர தேரோ சவால் விடுத்துள்ளார்.

பொரளை பௌத்த வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் பேசுகையிலேயே பிரஞாசேகர தேரோ மேற்கண்டவாறு சவால் விடுத்தார்.

உலகப் புகழ்பெற்ற அறிஞர்களில் ஒருவரான டாக்டர் பரணவித்தானை தமது கூற்றுக்கு புள்ளி விபரங்களுடன் ஆதாரம் காட்ட வேண்டியது அவரது கடமை என்று தேரோ கூறினர்.

---

## சாராயம் விற்றாம்

### ரூ. 150 அபராதம்

பருத்தித்துறை, செவ்வாய்

புலோலி மேற்கு கோணந்திவைச் சேர்ந்த முத்தையா இரத்தினம் என்பவர் மீது சட்டவிரோதமாகச் சாராயம் விற்பனை செய்தார் என குற்றம் சாட்டி வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீதிபதி திரு. ஏ. வயித்திலிங்கம் முன்னிலையில் நேற்றைய தினம் வழக்கு விசாரணை செய்யப்பட்டபோது எதிரி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதி எதிரிக்கு 150 ரூபாய் அபராதம் விதித்தார்.


## கோழிக் கு[illegible] விற்பனைக்கு



பொல்லோரம் நோயில்லாத உயர்ந்த இன

**வெள்ளை 'லெக்கோன்' கோழிக்குஞ்சுகள்**

| | ஒரு நாள் | ஒரு கிழமை | 2 கிழமை | 3 கிழமை | ஒரு மாதம் |
|---|---|---|---|---|---|
| | ஒன்றின் விலை | ஒன்றின் விலை | ஒன்றின் விலை | ஒன்றின் விலை | ஒன்றின் விலை |
| 100-க்கு மேல் | 75 ச. | 90 ச. | ரூ. 1-25 ச. | ரூ. 2-40ச. | ரூ. 2-90ச. |
| 50-க்கு மேல் | 80 ச. | 95 ச. | ரூ. 1-30 ச. | ரூ. 2-45ச. | ரூ. 2-95ச. |
| 50-க்குள் | 85 ச. | ரூ. 1-00 ச. | ரூ. 1-35 ச. | ரூ. 2-50ச. | ரூ. 3-00ச. |

* ஒருநாள் கோழிக்குஞ்சுகள் வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரமே பெற்றுக்கொள்ளலாம்.

**தேசிய அவய கூடம் — கூழாவடி — ஆனைக்கோட்டை**

**NATIONAL HATCHERIES — Koolavadi — Anaicoddai**

# அணுகுண்டு பரிசோதனை முற்ருக கைவிடப்படவேண்டும்

## உலக பௌத்த சகோதரத்துவ சங்க மகாநாட்டில் கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

"உலகத்தின் எந்தப் பகுதியில் நடாத்தப்பட்டுவரும் அணுகுண்டுப் பரிசோதனைகளும் கைவிடப்படவேண்டும்" என்ற ஒரு தீர்மானம் கம்போடியாவில் நடைபெற்றுவரும் உலக பௌத்த சகோதரத்துவம் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜப்பானிய தூதுகோஷ்டியின் தலைவர் வணக்கத்துக்குரிய நிறி நாகயமா இத்தீர்மானத்துக்கான பிரேரணையைச் சமர்ப்பித்து வைத்தார். பிரேரணைக்குச் சாதகமாக 21 பேர்களும் பாதகமாக 4 பேர்களும் வாக்களித்தனர். செஞ்சீன, ரஷ்யா, வடவியட்நாம், மங்கோலியா ஆகிய நாலு கம்யூனிஸ்ட் நாடுகளுமே பிரேரணையை எதிர்த்து வாக்களித்தன.

## கல்வி அதிகாரி கூட்டிய மகாநாடு

முள்ளியவளை, செவ்வாய்

முல்லைத்தீவுப் பகுதியிலுள்ள பாடசாலைகளினதும், கல்லூரிகளினதும், தலைமையாசிரியர்கள், அதிபர்கள், பிரதம உதவி ஆசிரியர்களைக்கொண்ட மகாநாடொன்று, வவனியாக் கல்வியதிகாரி திருமதி ஆர். ஆர். நவரத்தினத்தால் கூட்டப்பட்டது.

முல்லைத்தீவுச் சைவப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி மகாநாட்டில் மாணவர் வரலாற்றுக் குறிப்புத் தயாரித்தல், பாடசாலை நடைமுறைகள், பதில் தலைமையாசிரியர்களின் நிலை முதலிய விஷயங்கள் ஆராயப்பட்டன எனத் தெரிகிறது.

## வெற்றியும் தோல்வியும

மாவிட்டபுரம், செவ்வாய்

இனுவில் ஜெயசக்தி கோஷ்டியினருக்கும் இளவாலை பரியோம்ஸ் கோஷ்டியினருக்கும் இடையே நடைபெற்ற 1-ம் பிரிவு உதைபந்தாட்டப்போட்டியில் ஜெயசக்தி கோஷ்டியினர் 3—2 கோல்களால்வெற்றி பெற்றனர்.

இரண்டாம்பிரிவினருக்கிடையே நடைபெற்ற மற்ருேர் உதைபந்தாட்டப் போட்டியில் ஜேம்ஸ் கோஷ்டியினர் 2—1 கோல்களால் வெற்றிபெற்றனர்.

## குதிரைப்பந்தய தடைச் சட்டம் கடுமையாக்க நடவடிக்கை

கொழும்பு, செவ்வாய்

குதிரைப்பந்தய தடைச்சட்டத்தை திருத்தியமைத்து குற்றவாளிகளைப் பொலிசார் தண்டிக்கக் கூடிய நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இத்திருத்த மசோதாவின் பிரகாரம் குதிரைப்பந்தய பிரசுரங்களை அச்சிடுபவர்களும் அவற்றை விநியோகிப்பவர்களும் சிறைத்தண்டனை அனுபவிகக வேண்டி நேரிடும். இன்னும் இப்பிரசுரங்களை அச்சிட உபயோகிக்கப்படும் அச்சுயந்திரங்கள் பிரசுரங்களை விநியோகிக்க ஏற்றிச்செல்லும் வாகனங்கள் யாவும் பறிமுதல் செய்யப்படும்.

## பொதுக்கூட்டங்களில் கலாட்டாசெய்பவருக்கு தண்டனை

புதுடில்லி, நவ. 21

பொதுக்கூட்டங்களில் கலாட்ட செய்பவர்களுக்கு தகுந்த தண்டனை அளிப்பதென கேரள அரசாங்கம் சட்டமியற்றியுள்ளது.

# புதிய வரிகளை தொழிற் சங்கங்கள் எதிர்க்கும்

கொழும்பு, செவ்வாய்

புதிய வரிகளுக்கும் வாழ்க்கைப்படியின் உயர்வுக்கும் தொழிற் சங்கங்கள் ஒன்று கூடித் தமது எதிர்ப்பைக் காட்ட விருக்கின்றன.

பிரதான தொழிற் சங்கங்கள் அனைத்தையும் கொண்ட அரசாங்க சேவையாளர் குழுவும், தொழிற் சங்கங்களின் தொடர்புக் கமிட்டிகளும் ஒன்றுகூடி டிசம்பர் 20-ம் திகதியன்று ஆர்ப்பாட்டக் கூட்டமொன்றை நடாத்த விருக்கின்றன. அரசாங்க சேவையாளர் குழு கீழ்வரும் அம்சங்களுக்குத் தனது எதிர்ப்பைக் காட்டிக்கொள்ளும்:

1. அதிகம் உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவு.
2. அத்தியாவசிய உணவுப் பொருள்கள்மீது சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள விலைகள் அதிகரிப்பு.
3. தொழிலாளர்மீது விதிக்கப்பட்டுள்ள தேசிய அபிவிருத்தி வரி.

அரசாங்கத்தின் பொருளாதார நிலைமைகளைச் சீர்ப்படுத்துவதற்கான பல மார்க்கங்களை அரசாங்க தொழிற்சங்கங்கள் அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறியுள்ளன என்றும் ஆனல் அரசாங்கம் எதுவித நடவடிக்கைகளையும் எடுத்திலது என்றும் அரசாங்க சேவையாளரின் கமிட்டி அங்கத்தவர் ஒருவர் கூறியுள்ளார்.

இதே சந்தர்ப்பத்தில், தேசிய அபிவிருத்தி வரிப்பணத்தை எவ்வாறு செலவிடலாம் என்பது பற்றி 12 மந்திரிமார் 12 மார்க்கங்களைக் கூறியுள்ளார்களாம்.

## சீனவின் நடவடிக்கை பற்றி

### கம்யூனிஸ்ட் கண்டனம்

புதுடில்லி, நவ. 21

இந்திய எல்லையுள் சீன ஊடுருவிவருவதுபற்றி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

சீன இந்தியாவுடன் முன்னர் செய்துகொண்ட ஒப்பந்தங்களை மீறி நடந்துகொள்வது பற்றியும் கம்யூனிஸ்ட்கட்சி கண்டித்துள்ளது.

## பெலாவத்தையில் தேயிலைத் தொழிற்சாலை

கொழும்பு, புதன்

பெலாவத்தையிலுள்ள அரசாங்க தோட்டக் கார்ப்பரேஷனின் தோட்டத்தைப் பார்வையிடுவதற்கென வருகிற சனிக்கிழமையன்று காணி விவசாய நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி' சில்வாவும் 50 எம். பிக்களும் செல்ல உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது.

சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதிநிதிகள் சபையின் முன்னிருந்து விசேஷ பஸ் ஒன்றில் எம். பி.க்கள் பெலாவத்தைக்குப் புறப்படுவர்.

அரசாங்கத்தோட்டக் கார்ப்பரேஷன் இங்கு1,000 ஏக்கர் நிலத்தில் தேயிலை பயிரிட்டு வருகிறது. ஏற்கனவே 370 ஏக்கர்கள் பயிரிடப்பட்டுள்ளன காட்டு நிலங்கள் சமப்படுத்தப்பட்டு வருகின்றன. பெலாவத்தையிலேயே தேயிலைத் தொழிற்சாலையொன்றை நிறுவும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளருக்கான வீடு வசதிகள், பள்ளிக்கூட வசதிகளையும் அமைப்பதற்கு கார்ப்பரேஷன் ஒழுங்குகள் செய்து வருகிறது.

## குடியேற்றவாசிகள் குறைபாடுகள்

### நீக்குவதாக எம். பி. வாக்குறுதி

வவனியா, செவ்வாய்

பூந்தோட்டக் குடியேற்றத்திலுள்ளவர்களுக்கு ஒருஏக்கர் நிலம்தானும் இல்லையென்றும் உடையார்குளத்துக்கு அருகிலுள்ள கமநிலத்தை காணிக் கச்சேரிவைத்து தமக்குப் பகிர்ந்து தருமாறு கடந்த 5 வருடங்களாகக் கேட்டும் மாவட்ட அதிபர்கள் இது பற்றி இதுவரை அக்கறை காட்டவில்லையென்றும் தெரிவிக்கும் மகஜர் ஒன்றை வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரத்திடம் பூந்தோட்ட சனசமூக நிலையக் காரியதரிசி திரு க. கணபதிப்பிள்ளை சமர்ப்பித்தார். எம். பி. தாம் இது விஷயமாக விரைவில் நடவடிக்கையெடுப்தாக உறுதியளித்தார்.

# காசநோய் கண்டவருக்கு புனர்வாழ்வளிப்பதில் சுகாதார இலாகா தோல்வி?

கொழும்பு, புதன்

காசநோய்கண்டு குணமடைந்தவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கெனக் கடந்த சில ஆண்டுகளாக எடுத்துவந்த முயற்சிகளில், சுகாதார இலாகா தோல்விகண்டுள்ளது. கஷ்டம் ஏற்படும் என்னும் காரணத்தால் எதுவித உத்தியோகத்திலும் பயிற்சியிலும் அமர்ந்துகொள்வதற்கு நோய்கண்டு குணமடைந்த இவர்கள் தயங்குகிருர்கள் எனச் சுகாதார இலாகா அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கெனச் சுகாதார இலாகா, தையல், பன்னவேலை தச்சுவேலை, சுருக்கெழுத்து, தட்டெழுத்து ஆகியவற்றில் பயிற்சி அளித்துவருகிறது. ஆனல் ஒரு சிலரே இப்பயிற்சிகளில் ஈடுபட்டுவருவதாகத் தெரிகிறது.

தலகொல்லையில் சுகாதார அமைச்சு அமைத்துள்ள புனர்வாழ்வு நிலையத்தில் 80 பேர் பயிற்சிபெறக்கூடிய வசதிகள் இருந்தும் 37 பேர் மட்டுமே பயிற்சிபெற்று வருகிருர்கள். சுமார் 16,000 நோயாளிகளுக்கு 80 லட்சம் ரூபாயை, அரசாங்கம் உதவிவருகிறது எனச் சுகாதார இலாகா அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். கடந்த வருடம், காசநோய் காரணமாக 9,903,775 ரூபாய் செலவிடப்பட்டது. இதில் 26 லட்சம் மருந்துகளுக்கும் 15 லட்சம் உணவுகளுக்கும் செலவிடப்பட்டது.

## சேவியர் கோஷ்டிக்கு வெற்றி

மன்னர், செவ்வாய்

பி. எஸ். வி. கோஷ்டிக்கும் சென்ற் சேவியர் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் சென்ற் சேவியர்க்கோஷ்டி 3 கோல்களால் வெற்றிபெற்றது.

திரு. ஜே எஸ். பொன்ராஜ் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## புதிய பள்ளிவாசல் திறப்புவிழா

பதுளை, செவ்

கந்தகெதர நகரில் முஸ்லிம் பள்ளிவாசல் இல்லாக் குறையை நிவர்த்தி செய்ய அந்நகர முஸ்லிம்களாகிய ஜனப் எஸ். நயினுமுகம்மது, ஜனப் எஸ். எம். நயிம்பாய், அல்ஹாஜ் கே. ஏ. அகமது ஆகியோர் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனகப் பள்ளிவாசல் ஒன்று நிறுவப்பட்டது. பதுளை அல்ஹாஜ் ஏ. எல். பக்கீர் சாய்பு அதனைத் திறந்துவைத்தார்.

பதுளை கே. எஸ். எம். தங்கல்பிரார்த்தனை நடத்தினர்.

திறப்புவிழாவில் சொர்ண தொட்ட எம். பி. திரு. எஸ். பி. எக்கநாயக்கா, கந்தகெதர கிராமஅதிகாரி, அரசாங்க பாடசாலையின் பொத்த ஆசிரியர், சாரணியாதோட்ட மனேஜர் திரு. குனோவ் மற்றும் சகல மக்களும் கலந்துகொண்டனர்.

பள்ளிவாசலுக்கு கந்தகெதரஜுமாபள்ளிவாசலென நாமம் சூட்டப்பட்டது.

பொதுக்கூட்டம் அல்ஹாஜ் ஏ. எல். பக்கீர்சாய்பு தலைமையில் நடைபெற்றது. அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அஸீஸ் கிராஅத் ஓதினர்.

தலைவர் தமது உரையில் அப்டள்ளிவாசல் உருவாகியிருப்பது கந்தகெதர மக்களின் ஒற்றுமையின் சின்னமாகுமெனக் குறிப்பிட்டார்.

திரு. எஸ். பி. எக்கநாயக்க எம். பி. பேசும்போது சகல மதத்தினரும் பள்ளிவாசல் திறப்புவிழாவில் கூடியிருப்பது தமக்கு மகிழ்ச்சி தருவதாகக் குறிப்பிட்டார்.

ஜனப் எம். எம். சாகுலமீது அனைவருக்கும் நன்றி கூறினர்.

# பெண் ஒருத்தி மது விற்ருராம்

## எச்சரிக்கையுடன் ரூ. 10 அபராதம்

மாவிட்டபுரம், புதன்

"'பெண்கள் கள்ளு விற்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். அதுவும் 21 வயதிற்குக் கீழ்ப்பட்ட பெண்கள் விற்ருல் அது ஓர் மாபெரும் குற்றமாகும் உனதுகுற்றத்தை நீ ஒப்புக் கொள்வதால் உன்னை 10 ரூபா அபராதத்துடன் விடுதலை செய்கிறேன். இப்படிப்பட்ட குற்றத்தை இனிமேல் நீ செய்தால் உனக்கு விதிக்கப்படும் அபராதம் மிக அதிகமாக இருக்கும்."

மாதகலைச் சேர்ந்த பேதுரு பாவலு என்பவரின் மனைவியான லூர்த்தம்மா சட்டவிரோதமாகக் கள்ளு விற்றதாக சங்கானை கலால் பகுதியினரால் குற்றஞ் சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் எதிரிக்கு 10 ரூபா அபராதம் விதித்து தனது தீர்ப்பில் மேற்கண்டவாறு கூறினர்.

# 6 வருட காலத்தில் 282,052 ஏக்கர் நிலம்

## அரசாங்கம் வழங்கியது

கொழும்பு, செவ்வாய்

பிரதான குடியேற்ற திட்டங்களுக்கும், தேயிலை, ரப்பர், தேங்காய் பயிரிடுவதற்கான மலைநாட்டுப்பகுதிக் குடியேற்ற திட்டங்களுக்கும், கிராமவிஸ்தரிப்புத் திட்டங்களுக்கும், வீடமைப்புத் திட்டங்களுக்குமென அரசாங்கம் கடந்த ஆறுவருடகாலத்தில் 282,052 ஏக்கர் நிலத்தை வழங்கியுள்ளது.

காணி விவசாய நீர்ப்பாசன இலாகா நடாத்திய ஆராய்ச்சியொன்றினல் இவ்விவரம் பெறப்பட்டுள்ளது.

காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் முடிக்குரிய நிலப்பரப்பில் 282,052 ஏக்கர்களைப் பல்வேறு உபயோக திட்டங்களுக்கும் வழங்கியுள்ளது. 1955 வரை வழங்கப்பட்ட முடிக்குரியநிலப் பரப்பின் தொகை 519,636 ஏக்கர்களாகும். கடந்த ஐந்து வருடகாலப்பகுதியிலும் கிராம விஸ்தரிப்புத் திட்டங்களுக்கெனவே அதிகமான நிலம் ஒதுக்கப்பட்டது. இதற்கென 129,000 ஏக்கர்கள் ஒதுக்கப்பட்டன. 1 36,267 ஆட்களின் பேரில் காணி வழங்கப்பட்டுள்ளது 1955ம ஆண்டுவரை 262,448 ஆட்களின் பேரில் காணிவழங்கப்பட்டது. முடிக்குரிய நிலம் வழங்கப்பட்டவர்களில் தனி மனிதரும் குடும்பங்களும் அடங்குவர்.

## அதிக கள் வைத்திருந்தவருக்கு அபராதம் ரூ. 50

மாவிட்டபுரம், செவ்வாய்

உடுவில் வாசியான நன்னி முதலி என்பவர் சட்டவிரோதமாக 22 போத்தல் கள்ளை வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டி சுன்னகம் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி எதிரியை 50 ரூபா அபராதம் செலுத்தும்படி கட்டளையிட்டார்.

## கன்னங்கராவுக்கு கௌரவப் பட்டம்

### வித்தியோதய பல்கலைக் கழகம் இன்று வழங்கும்

கொழும்பு, புதன்

வித்தியோதய பல்கலைக் கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழா புதன் கிழமை கங்கொடவிலவிலுள்ள பல்கலைக் கழகத்தின் புதிய கட்டடத்தில் நடைபெறும்.

இப்பட்டமளிப்பு விழாவில் முன்னுள் கல்வி மந்திரிகளில் ஒருவரான திரு. ஸி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கராவுக்கும் இலங்கையிலுள்ள பர்மிய ஸ்தானிகருக்கும் கௌரவப் பட்டங்கள் வழங்கப்படும்.

பல்கலைக் கழக அத்யட்சகர் சேர். ஒலிவர் குணத்திலகா பட்டங்களை வழங்குவார். 33 பட்டதாரிகள் பட்டம் பெறுவர்.

## டிக்சன் சம்பியன்

மாவிட்டபுரம், செவவாய்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 2-ம் பிரிவு டிக்சன் இல்லத்திற்கும் வாட் இல்லத்திற்கும் இடையே நடைபெற்ற சாம்பியன் உதைபந்தாட்டப் போட்டியில் டிக்சன் இல்லம் 1—0 கோலால் வெற்றிபெற்றது.

திரு எஸ். சுந்தரலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### மணி வாக்கு

'நேரிய வழியில் அடைய முடியாததை ஒருநாளும் குறுக்கு வழியில் அடைந்து விடமுடியாது.'


ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு கார்த்திகை மீ 8உ (23-11-61,

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


# கொழும்புத் திட்டத்தில் மலாயா அக்கறை

## துங்குவின் பேச்சுக்கு பிரதிநிதிகள் பாராட்டு

கோலாலம்பூர்,

கொழும்புத்திட்ட அமைச்சர்களின் மகாநாட்டில் பிரதமர் துங்கு நிகழ்த்திய தூர திருஷ்டியும் – உண்மையும்-உத்வேகமும் நிறைந்த பேச்சை பலநாடுகளின் பிரதிநிதிகள் பராட்டியுள்ளனர்.

தென்கிழக்கு ஆசியாவில் மூலப் பொருட்களை உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு ஸ்திர விலையும் ஏற்றுமதி விஸ்தரிப்புமே முக்கிய பிரச்சினைகள் என்று பிரதமர் துங்கு கூறியதை அனைவரும் ஒப்புக் கொண்டனர்.

மகாநாட்டிற்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை இந்திய பிரதிநிதி திருமதி சின்ஹா கூறினர்.

மலாயாவைப்போல் இந்தியாவும் பலமொழி பேசும் மக்களைக் கொண்ட கூட்டரசு என்றும், ஆகையினல் மலாயாவின் அபிவிருத்தித் திட்டம் பற்றி பிரதமர் துங்குவின் பேச்சில் தான் மிகுந்த அக்கறையுடன் கவனித்ததாகவும் அவர் கூறினர்.

பிரதமர் துங்குவின் உத்வேகமூட்டும் சொற்பொழிவு மகாநாட்டின் வெற்றிக்கு சூசகமாகும் என்றும் அவர் கூறினர்.

பிரதமர் துங்குவின் பேச்சு கேட்கவேண்டிய பேச்சு என்று பிரிட்டிஷ் பிரதிநிதி லாண்ட் டௌன் கூறினர்.

இந்த மகாநாட்டில் பேசுவதற்காக மலேசியா திட்டம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த லண்டன் செல்லவிருந்ததை பிரதமர் துங்கு ஒத்தி வைத்ததற்கு மகாநாடு கடமைப்பட்டிருக்கிறது என்றும் அவர் கூறினர்.

கொழும்புத் திட்டத்தில் மலாயா அரசாங்கம் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு என்றும் தெரிவித்தார்.

நல்ல வேலை நிலை, சுபீட்சம், கல்வி அபிவிருத்தி, வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்தல் போன்றவற்றினல் கம்யூனிசம் அழியும் என்பதை கம்யூனிஸ்டுகள் உணர்ந்து கொண்டிருப்பதாக தெற்கு வியட்னம் பிரதிநிதி கூறினர்.

மலாயா பொருளாதாரத் துறையில் நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்து வருவதோடு, அஸா அல்லது மலேசியா போன்ற திட்டங்களினல் பிராந்திய ஒத்துழைப்பை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் கூறினர்.

மூலப் பொருள்களின் விலையில் ஏற்ற இறக்கம் ஏற்படுவது பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதாகவும் அவர் கூறினர்.

மலாயா அளித்த மகத்தான வரவேற்புக்கு இந்தோனேஷிய பிரதிநிதி நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இரு நாடுகளும் அண்டை நாடுகள் மட்டுமல்லாமல் கலாச்சாரத் துறையில் நெருங்கிய தொடர்புடையன என்றும் அவர் கூறினர். இந்தோனேஷியாவும், மலாயாவும் ஒரு குடும்பத்தின் பிரிவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு ஏற்றுமதி வருமானத்தை விஸ்தரிக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்ற பிரதமர் துங்குவின் கருத்தை தான் ஒப்புக் கொள்ளுவதாகவும் அவர் கூறினர்.

## "பிரச்சினை இல்லாத பஸ்கள் தேவை"

வடபகுதிக்கு "பிரச்சினையில்லாத" பஸ்ஸுகளை விரைவில் அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனே செய்தி அனுப்புவதென்று இலங்கை போக்குவரத்து சபையின் பிரதேச ஆலோசனைச் கமிட்டி தீர்மானித்துள்ளது. இத்தீர்மானப்படி இ. போ. ச. தலைமைக் காரியாலயம் தக்க ஒழுங்குகளைத் தாமதமின்றிச் செய்ய வேண்டும். அப்போது தான் இப்பகுதியில் பஸ்ஸிலே பிரயாணம் செய்யும் பொது மக்கள் நீண்ட காலமாகப்படும் சங்கடம் ஓரளவு தீரமுடியும்.

தீவின் மற்றப் பகுதிகளில் இல்லாத பெரியதோர் கஷ்டம் இங்கு பஸ் பிரயாணிகளுக்குப் பல வருடங்களாக இருந்து வருவது பகிரங்க ரகசியம். மற்ற இடங்களில் புதிய பஸ்ஸுகள் பல ஓடுகின்றன. ஆனல் இங்கோ எல்லாம் பழைய பஸ்ஸுகள். பலமுறை பழுது ஏற்பட்டவை. ரஸ்தாக்களில் ஓடுவதற்கே அவற்றில் பல தகுதியில்லாதனவாகும். இதைப்பற்றிக் கேட்டால் தாங்கள் புதிய 'ஸ்ரீ' பஸ்ஸுகளை அனுப்பத் தயாரென்றும், அப்படி அனுப்பப்பட்ட இரு பஸ்ஸுகளில் ஒன்று நாசமாக்கப்பட்டதென்றும் போக்குவரத்துமந்திரி சமாதானம் சொல்லலாம். ஆனல் இவ்வித வெறும் சமாதானங்கள் கூறுவதுடன் அரசாங்கத்தின் கடமை தீர்ந்துவிடாது. பிரதேச ஆலோசனைக் கமிட்டி கூறுவதுபோல் "பிரச்சினை இல்லாத" புதிய பஸ்ஸுகளை இங்கு அனுப்ப ஒழுங்கு செய்ய வேண்டும்.

காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா இருந்த காலத்திலேயே இப்பிரச்சினை எழுந்தது. அவர் இதிலுள்ள சிக்கலை உணர்ந்து ஸ்ரீ பஸ்ஸுகளை அனுப்பாமல் 'ஐ ஸி' பஸ்ஸுகளை இப்பகுதிக்கு அனுப்ப ஒழுங்கு செய்தார். ஆனல் இப்போது அவையும் பழையதாகிவிட்டன. புதிய பஸ்ஸுகள் இங்கு சீக்கிரத்தில் அனுப்பப்படாவிடில், பிரயாணிகளின் சங்கடங்கள் அதிகமாவதுடன் விபத்துக்களும் பெருகக்கூடும். இதற்கு இடம் கொடாமலும் வீண்பிரச்சினை கிளப்பாமலும் நிலைமையை வெற்றிகரமாக சமாளிக்க வேண்டிய பொறுப்பு இ. போ. சபையையும் அரசாங்கத்தையும் சேர்ந்ததாகும்.

கிராமப்புறங்களில் பஸ் நிறுத்துமிடங்களை அதிகரிக்க வேண்டுமென்றும், பஸ் ஊழியர்கள் பிரயாணிகளுடன் மரியாதையாகப் பழக வேண்டுமென்றும் மழை காலத்தில் யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் பொதுமக்கள் அவதிப்படாமலிருக்க தக்க பாதுகாப்புகளைச் செய்ய வேண்டுமென்றும் வேறு பல நல்ல தீர்மானங்களையும் ஆலோசனை சபை செய்துள்ளது. இத்தீர்மானங்களை எவ்வளவு சீக்கிரத்தில் செயல்படுத்த முடியுமோ அவ்வளவும் செய்வது நல்லது. தனிப்பட்டவர்களிடமிருந்து பஸ் போக்குவரத்தை அரசாங்கம் பொறுப்பேற்றபின் அதை மேலான முறையில் நிறைவேற்றிவைக்க வேண்டியது அரசாங்கத்தின் முழுப் பொறுப்பாகும்.

## தாதிமார்கள்

தாதிமார்களுக்கு ஆற்றலும் தேர்ச்சியும் மட்டும் போதாதென்றும் பணிபுரிவதில் தளராத விருப்பமிருக்க வேண்டுமென்றும் சேவைக்கே தங்களை அர்ப்பணிப்பதில்தான் அவர்களது பெருமை தங்கியுள்ளதென்றும் கண்டியிலே நடைபெற்ற தாதிமார் மகாநாட்டை ஆரம்பித்து வைக்கையில், பிரதமர் சிறிமா சரியாக அறிவுறுத்தினர்.

இன்று ஆஸ்பத்திரியில் பணிபுரியும் தாதிமார்கள் பிரதமரின் இந்த யோசனையை மனதில் கொண்டு சேவை புரிந்தால் அங்குள்ள நோயாளர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். துரதிருஷ்டவசமாக தாதிமார்களில் பலரும் சம்பளத்துக்கு வேலை செய்வதாகக் கருதுகிறர்களேயன்றி, தாங்கள் செய்வது உண்மையில் தெய்வப்பணி என்பதை உணர்வதில்லை. இதை உணர்ந்து பணி புரிந்தால், தாதிமார்கள் தங்களுக்குக் கிடைத்த தொண்டை ஒரு பாக்கியமாகக் கருதி, அன்புச் சேவை செய்வர். தாதிமார்களுக்கும் ஆஸ்பத்திரி சிப்பந்திகளுக்கும் இவ்விஷயத்தை அடிக்கடி தக்கவர்களைக் கொண்டு அறிவுறுத்தி உற்சாகமூட்டுவது விரும்பத்தக்கது.

இதேசமயம் ஆஸ்பத்திரிகளில் தாதிமார் சேவைக்குத் தமிழ்ப்பெண்கள் அதிகம் முன் வருவதில்லை என்று ஒரு குறையுண்டு. தாதிகள் சேவை பிரதமர் கூறுவதுபோல் பெருமையளிக்கும் ஒரு நல்ல சமூகப் பணியாகும். படித்த தமிழ்ப் பெண்களில் பலர் இச்சேவைக்கான பயிற்சி பெற்றுதொண்டாற்றத் துணிச்சலுடன் முன் வந்து, இக்குறையைத் தீர்க்க வேண்டும்.

# மலேசியா குறித்து இரு அரசியற்கட்சிகள் கருத்து

சிங்கப்பூர்

மலேசியா குறித்து மலாயா அரசினருடன் பேச்சுவார்த்தை நடத்த போர்னியோ பிரதேசங்களின் காலனித்துவ அரசாங்கத்துக்கு உரிமை கிடையாது என்று மலாயாவிலும் சரவாக்கிலும் உள்ள இரண்டு அரசியல் கட்சிகள் கூறியுள்ளன

போர்னியோ பிரதேசங்களுடன் மலாயாவின் அரசியலமைப்பு உடன்பாடு எதுவும் மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று மலாயன் மக்கள் சோஷியலிஸ்ட் முன்னணி, சரவாக் ஐக்கிய மக்கள் கட்சி ஆகிய இரு கட்சிகளும் கூச்சிங்கில் வெளியிட்டுள்ள ஒரு கூட்டறிக்கை கூறுகிறது.

அவர்களுக்குச் சுயாட்சி கிடைத்தபிறகே இதைச் செய்ய முடியும் எனக் கூறிய அவ்வறிக்கை 'காலனித்துவ ஆட்சியின் கீழ் உள்ள மக்கள் அனைவர்க்கும் சுதந்திரம் அளிக்க வேண்டும்' என வலியுறுத்தியது.

மலேசியா கருத்தைத் தாங்கள் உறுதியாக ஆதரிப்பதாக அவர்கள் கூறினர்.

இந்தக் கூட்டறிக்கையில் சோஷியலிஸ்ட் முன்னணித் தலைவர் இஞ்சே இஷாக் பின் ஹாஜி முஹம்மது, சரவாக் ஐக்கிய மக்கள் கட்சித் தலைவர் திரு. ஓங்கீ ஹுய் ஆகிய இருவரும் கையெழுத்திட்டுள்ளனர்.

'அந்தப் பிரதேசங்களில் உள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத எந்த அரசாங்கமும் அந்த மக்களைப் பிரதிநிதிக்க உரிமை கிடையாது' என கூட்டறிக்கை வலியுறுத்தியது.

இஞ்சே இஷாக் தலைமையில் ஐவர் கொண்ட சோஷியலிஸ்ட் முன்னணிக் குழு போர்னியோ பிரதேசங்களில் அண்மையில் ஆய்வுச் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டது.

பாரிசான் சோஷியலிஸ்ட் ஆரம்பக் கூட்டத்தில் கலந்து கொள்ள சரவாக் ஐக்கிய மக்கள் கட்சியின் தூதுக்குழுவை 'அனுமதிக்க மறுத்ததற்காக' சிங்கைப் பிரதமர் திரு. லீ குவான்யூவின் போக்கை இந்த இரு தலைவர்களும் 'பலமாகக் கண்டனம் செய்தனர்.'

மேலும் ஏகாதிபத்தியத்தையும் காலனித்துவத்தையும் அவர்கள் கண்டனம் செய்தனர்.

காலனித்துவ ஆட்சியை எதிர்த்துப் போராடுவதற்கும் சமாதானம், நீதி, பேச்சு சுதந்திரம் ஆகியவற்றைப் பெறும் அனைவரது உரிமைக்கும் அவர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

தடுப்புக் காவலில் வைக்கவும், நடமாட்டக் கட்டுப்பாடு விதிக்கவும் அனுமதிக்கும் சட்டங்களைப்பயன் படுத்துவதற்கு அவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

# பிரிட்டனில் குடியேற்றக் கட்டுப்பாடு இலங்கையரை அதிகம் பாதிக்காது

கொழும்பு, புதன்

காமன்வெல்த் நாடுகளிலிருந்து பிரிட்டனில் குடியேறும் மக்களைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டம் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் சிலகாலமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. இச்சட்டம் பிரிட்டன் செல்லும் இலங்கையரை அதிகம் பாதிக்கமாட்டாது என பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கைக்குக் கூறியுள்ளது.

இச் சட்டத்தின் விபரங்கள் அனைத்தையும் பிரிட்டிஷ் ஹைக்கமிஷன் இலங்கை அரசாங்கத்துக்குத் தெரிவித்துள்ளதென்றும் மசோதா சட்டமாகிய பின்னர் இலங்கையை பொறுத்தவரை அச் சட்டம் கடுமையானதாகாது என்றும் பிரிட்டிஷ் ஹைக்கமிஷன் வட்டாரங்கள் கூறியுள்ளன. ஏனைய காமன்வெல்த் நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இலங்கையிலிருந்து பிரிட்டனில் குடியேறுவோர்தொகை மிகவும் குறைவு எனவும் ஹைக்கமிஷன் வட்டாரங்கள் கூறியுள்ளன. இலங்கையிலிருந்து பிரிட்டன் செல்லுவோர் பெரும்பாலும் கல்வி கற்பவர்களும் உத்திகயோபூர்வமானவர்களுமே, மசோதா இப்பேற்பட்டவர்களை அதிகம் பாதிக்க மாட்டாது எனத் தெரிகிறது.

மசோதா பற்றி பிரிட்டிஷ் ஹைக்கமிஷன் மேலும் இலங்கையுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தமாட்டாது. காமன்வெல்த் நாடுகள் மசோதாவுக்கு எதிர்ப்புக் காட்டினல் அந்நாட்டுப் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிப்பதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு மகாநாடு கூட்ட நேரிடும் எனவும் இவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஐயாறன் எழுதுவது

திருக்கேதீச்சரத்திலிருந்து ஓர் அன்பர் எழுதுவதாவது:-

திருக்கேதீச்சரத்திலே சிவானந்தகுருகுல கிருகப்பிரவேசம் முறைப்படி இம்மாதம் 9-ந் திகதி நடைபெற்றது. பெரும் பணச் செலவிலே கட்டப்பட்டுள்ள இக்குருகுலத்தில் கல்லூரியும் வசதியான ஹாஸ்டலும் அமைந்துள்ளன. முன் காலத்தில் மாணவர்கள் குருகுல வாசம் செய்து கல்வி பயின்றது போல, இங்கும் மாணவர்கள் வசிக்கவும் கல்வி பயிலவும் வேண்டிய வசதிகள் செய்யப் பெற்றுள்ளன.

உதவி பிரின்ஸிபாலும் சமஸ்கிருத ஆசிரியருமான சிவ ஸ்ரீ கே. நாராயணசாஸ்திரிகள், குருகுலத்திலேயே வசிக்கும் டைரக்டராக இருந்து வருவார். தமிழ்ப் பாடத்துக்கான விரிவுரையாளரும் சீக்கிரத்தில் நியமிக்கப்பெற்று அவரும் மற்ருேர் வாச டைரக்டராகக் கடமையாற்றுவார்.

ஜனவரி மாதம் தைப்பொங்கலானதும், இங்கு புதிய கல்வி வருடம் ஆரம்பமாகும். பல பெரியோர்கள் அடிக்கடி வந்து பல பாடங்களைக் கற்பிக்கவும் ஒழுங்கு செய்யப் பெற்றுள்ளது.

ஆரம்ப தினத்தன்று, அச்சுவேலியில் சிவ ஸ்ரீ குமாரசாமி குருக்கள், ஏழு மாணவர்களுக்குத் தீட்சை கொடுத்தார். இக்குருகுலத்தில் சேர பல மாணவர் மனுச் செய்துள்ளனர். இதிலிருந்து மேலும் 8 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர். குருகுல வாசத்தில் படிப்புடன், நல்லொழுக்கமும் சமய சாதனைப் பயிற்சியும் முக்கியமாக இருக்குமாதலால் வருடத்திலே விடுமுறை நீங்கலாக, குறைந்தது 9 மாதங்கள் மாணவர்கள் இங்கு வசித்து பயில வேண்டியதவசியமாகின்றது. அதனல் குருகுல வகுப்புகள் நடக்கும் காலத்தில் வீட்டுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதற்கில்லை.

இந்தக் குருகுலத்தில்சேரும் மாணவர்களுக்கு, படிப்பு, புத்தகம், உடை, உணவு எல்லாம் இலவசமாகும். இந்துப் பொதுமக்களின் நன்கொடையாலேயே இந்த ஸ்தாபனம் நடைபெற வேண்டியுள்ளது.

* * *

இக்கடிதத்துடனே பாடவிதான விபரங்களும், மாணவர்கள் நாடோறும் செய்ய வேண்டிய கால அட்டவணையும் அடங்கிய ஒரு கைப்புத்தகமும் கிடைத்தது. காலை 4-30க்கு எழுந்திருத்தல், 5 முதல் 6 வரை பாடங்களைச் சிந்தித்தல், 6 முதல் 7-30வரை காலைக்கடன், 7-30 முதல் 8-30 இறைவழிபாடு, காலையுணவு, 9—12வரைவகுப்புகள். மாலையில் 12—2வரை உணவும் ஓய்வும், 2—4-30வரை வகுப்பு, 4-30—6-30வரை தேகாப்பியாசம், மாலைச்சந்தி, 6-30—8 இறைவழிபாடு, வேதமோதல், 8—8-30 உணவு, 9—10 படித்தல்,இரவு10—4-30 துயிலல்.

இக்கடிதத்தையும், கால அட்டவணையையும் பார்த்ததும், இங்கு இந்து சமயத்துக்கு மீண்டும் நல்ல காலம் பிறக்கிறதாக உணர்ந்தேன். திருக்கேதீச்சரம் கோவில் பன்முறை இடிக்கப்பட்டது. என்ருலும் மீண்டும் மீண்டும் அது கிளம்பி இப்போது அழகாக அங்குள்ள இறை அருளால் வளர்ந்து வருகிறது. கோவிலுடன்,வேதசிவாகமபாடசாலையும், உயர்தரக் கல்லூரியும் குருகுலமுறையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது நீண்டநாளாக

(5-ம் பக்கம் பார்க்க)

ஐ. நா. அரசியல் கமிட்டி

# பரிசீலனைக் குழு பற்றி ரஷ்யா-அமெரிக்கா பேச்சுவார்த்தை

## இந்திய பிரேரணை நிறைவேறியது

நியூயோர்க், நவ. 22

**ஆயுதப்பரிகரணம் சம்பந்தமாகப் பரிசீலனை நடத்தவிருக்கும் குழு பற்றி ரஷ்யாவும், அமெரிக்காவும் தனிப்பட்ட முறையில் சீக்கிரம் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமெனக் கோரும் இந்தியாவின் தீர்மானம் ஒன்றை ஐ. நா. அரசியல் கமிட்டி அங்கீகரித்தது.**

இதுசம்பந்தமான பிரேரணையைத் திரு. கிருஷ்ணமேனன் பிரேரித்தார். இந்தியாவுடன் ஐக்கிய அராபியக் குடியரசு, கானு ஆகிய நாடுகளும் தீர்மானத்தைப் பிரேரிப்பதில் பங்கு வகித்தன.

தீர்மானத்தைப் பிரேரித்து திரு. மேனன் பேசுகையில், கணக்கில்லாத அழிவு சக்திகள் உலகில் இருப்பதாயும், படைகுறைப்பு பற்றி உடன்பாடு இன்றேல் புதிய அத்தியாயம் ஆரம்பமாகாது என்றும் கூறினர்.

பரிசீலனைக்குழு சம்பந்தமாய் ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா எப்போதும் தயாராய் இருக்கிறதுஎன யு. எஸ். பிரதிநிதி திரு. ஆர்தர் டீன் அறிவித்தார். அமெரிக்கா இக்குழுவில் 20 நாடுகள் அங்கம் வகிக்கவேண்டும் எனக் கோருகிறது.

## அணு சோதனை தடை பற்றி பேச்சு வார்த்தை

### ஜெனிவா செல்லுமாறு யு. எஸ். தூது கோஷ்டிக்கு உத்தரவு

வாஷிங்டன், நவ 22

அணுசோதனை தடைபற்றி ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக உடனடியாக ஜெனிவா செல்லுமாறு தனது தூதுகோஷ்டிக்கு அமெரிக்கா உத்தரவிட்டிருக்கிறது. பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே எவராவது அணுசோதனையை நடத்தினல் தாங்களும் தொடர்ந்து சோதனை நடத்த உரிமை உண்டு என்னும் அமெரிக்காவின் வாதத்தை ரஷ்யா ஏற்றுக்கொண்டிருப்பதாய்க் கூறப்பட்டது.

## கென்னடி-மேனன் சந்திப்பு

வாஷிங்டன், நவ. 22

இந்தியப்பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் நேற்று ஜனதிபதி கென்னடியைச் சந்தித்துப் பேசினர். அப்போது அவருடன் திரு. பி. கே. நேருவும் சென்றிருந்தார். மரியாதைக்கறிகுறியான சந்திப்பேதவிர வேறுகாரணம் எதுவுமில்லை எனத் தம் சந்திப்பு பற்றி திரு. மேனன் தெரிவித்தார்.

காங்கோ

## கிவுவில் ஐ. நா. படை பலப்படுத்தப்படுகிறது

### பாதுகாப்பு சபையில் தொடர்ந்து விவாதம்

லியப்போல்ட்விலி, நவ. 22

கிவு மாகாணம் பற்றிப்பரிசீலனை செய்வதற்காக காங்கோ பார்லிமென்ட்கூடியது. ஆனல் கூட்டத்தில் கூச்சலும், குழப்பமும் நிலவியதால் சபையை சபாநாயகர் ஒத்திவைத்தார்.

இதற்கிடையில் கிவு மாகாணத்திலுள்ள கிண்டுவில் ஐ. நா. படைகள் பலப்படுத்தப் பட்டுள்ளன. 13 இத்தாலிய விமானிகள் அங்கு படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமாய் கலப்புக்கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டுமெனவும் கோரப் பட்டிருக்கிறது.

இந்தக் கொலைகளுக்குக்காரணமான குற்றவாளிகளைக் கண்டுபிடித்தே தீருவதுஎன்று ஐ.நா. உறுதிகொண்டுள்ளது

காங்கோ பற்றிய விவாதம் பாதுகாப்பு சபையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது காங்கோ பற்றி அமெரிக்கா கொண்டுவந்துள்ள திருத்தப் பிரேரணையை வீட்டோ செய்யப் போவதாய் ரஷ்யா பயமுறுத்தியுள்ளது.

## சர்வதேச ஒத்துழைப்பு வருஷம்

நியூயோர்க், நவ. 22

சர்வதேச ஒத்துழைப்பு வருஷம் ஒன்றைப்பிரகடனம் செய்யுமாறு ஐ. நா. வில் இந்தியப் பிரதிநிதி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் ஒரு பிரேரணையைத் தாக்கல் செய்தார். 1963-ம் ஆண்டை சர்வதேச ஒத்துழைப்பு வருஷமாக வைத்துக்கொள்ளலாம் என அவர் அப்போது கூறினர்.

---

## அமெரிக்காவின் முக்கட்ட ராக்கெட்

கேப்கார்னிவல், நவ. 22

அணு ஆயுதப். பாதுகாப்பு முறை சம்பந்தமான முக்கட்ட ராக்கெட் ஒன்றை அமெரிக்கா வெற்றிகரமாகப் பரீட்சித்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது. ஏவுகருவிகளை ஆகாயத்திலேயே தடுத்துநிறுத்தி அவற்றை நாசமாக்கும் சக்தியை இந்த ராக்கெட்டுகள் கொண்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## கேரள மந்திரி சபைத் தகராறு தீர்ந்தது

திருவனந்தபுரம், நவ. 22

கேரள மந்திரிசபையில் ஏற்பட்டிருந்த கருத்து வேற்றுமைகள் தீர்ந்துவிட்டதென முதன் மந்திரி பட்டம் தாணுப்பிள்ளை அறிவித்தார். மந்திரி சபைக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டபின் அவர் இவ்வாறு அறிவித்தார்.

---

## ராஜினமா

ஜெனிவா, நவ. 22

ஜெனிவாவிலுள்ள சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத் தலைவர், தம் பதவியை ராஜினமாச் செய்துவிட்டார்.

---

## சிரியா பிரதமர் ராஜினமா

டமாஸ்கஸ், நவ. 22

சிரியா பிரதமர் டாக்டர் குஸ்பாரி தம் பதவியை ராஜினமாச் செய்துவிட்டார். அவரது ஆட்சிக்குப்பதில் இடைக்கால அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் நடைபெற்று, அதன் முடிவு வெளியாகியதும் இடைக்கால் மந்திரி சபை ராஜினமா செய்யும்.

---

## வெள்ளக் கட்டுப்பாடு திட்டம்

புதுடில்லி, நவ. 22

உத்தர பிரதேச ராஜ்யத்தில் வெள்ளக்கட்டுப்பாடு திட்டம் ஒன்று ரு. 67 கோடி செலவில் அமுல் செய்யப்படவிருக்கிறது.

---

## ஆசிரியமணிக்கு பாராட்டு விழா

சாவகச்சேரி, புதன்

கடந்த நாற்பத்திரண்டு ஆண்டுகளாக ஆசிரியராகக் கடமையாற்றியவரும், இருபத்தேழு ஆண்டுகளாகக் கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலையில் தலைமையாசிரியராகப் பணியாற்றி இளைப்பாறியவருமான ஆசிரியமணி க. சின்னத்துரையின் சேவை நலம் பாராட்டு விழா திரு. சின்னையா தலைமையில் வித்தியாசாலைமண்டபத்தில் நடைபெற்றது. ஆசிரியருக்குப் பொற்கிழி வழங்கிப் பொன்னுடையும் போர்த்தப் பட்டது.

தனக்களித்த உபசரணைக்கும் உபகாரங்களுக்கும் ஆசிரியமணி நன்றிகூறினர்.

---

## சிறுவன் மரணம்

பெந்தோட்டை, புதன்

கொலுவமுல்லாவைச் சேர்ந்த யு. கே. டி. சோமரத்ன என்னும் ஏழு வயதுச் சிறுவன், ஒரு கால்வாய் நீரில் அமிழ்ந்தியதால் மரணமானர்.

## ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த ஒரு பெரிய குறை நீங்குவதாகும்.

மாணவருக்கு சமஸ்கிருதம், தமிழ், வேதம், ஆகமம் இவற்றுடனே ஆங்கிலம், உலகசரித்திரம், பொது அறிவு முதலியனவும் கற்பிக்க ஒழுங்குசெய்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் அன்று கண்டகனவு இப்போது நனவாகி நிறைவேறி வருவதைப் பார்க்கிரேம்.

இதையெல்லாம் நேரில் சென்று பார்க்க ஆவலாகவுள்ளது. திருவருள் எப்படியோ!

* * *

"தொண்டர் நாள்தொறும் துதிசெய அருள் செய் கேதீச்சர மதுதானே."

--- சம்பந்தர்

## ஜப்பானிய பிரதமருக்கு செங்கோட்டையில் வரவேற்பு

### நேரு - இக்கேடா பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறும்

புதுடில்லி, நவ. 22

புதுடில்லி நகரசபையின் சார்பில் நேற்று இங்குவந்துள்ள ஜப்பானியப் பிரதமர் திரு. இக்கேடாவுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. இவ்வரவேற்பில் ஜப்பானியப் பிரதமர் பேசுகையில் அணுசோதனையை உடன் நிறுத்தும் முயற்சியில் ஜப்பானும் இந்தியாவும் கூட்டாக முயற்சி செய்யவேண்டுமெனக் கூறினர். இருநாடுகளின் அரசியல் கலாச்சார ஒத்துழைப்பையும் அவர் வற்புறுத்தினர். இவ்வரவேற்பில் பிரதமர் நேரு பேசுகையில், சமாதானத்தைப் பராமரிப்பதே இன்றைய மிகப்பெரும் பிரச்னை எனக் கூறினர்.

ஜப்பானியப் பிரதமர் நேற்று உப-ஜனதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணனைக் கண்டு பேசினர். உப-ஜனதிபதி திரு. இக்கேடாவுக்கு ஒரு விருந்தளித்துக் கௌரவித்தார்.

நேரு - இக்கேடா பேச்சுக்கள் இன்று தொடர்ந்து நடைபெறும்.

## குதிரைப்பந்தய பிரசுரங்களை வைத்திருப்பது குற்றம்

### சிறைத்தண்டனை விதிக்க சட்டம் வருகிறது

கொழும்பு, புதன்

குதிரைப்பந்தயம் சம்பந்தமான பிரசுரங்களை வைத்திருப்பது, எடுத்துச்செல்வது, விநியோகிப்பது ஆகியவற்றைக் குற்றமாக ஆக்கும்வகையில் தற்போதைய சட்டம் திருத்தப்படும். இது சம்பந்தமாக நேற்று உள்நாட்டு மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா தலைமையில்பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், சட்ட நகல் தயாரிப்பாளர் ஆகியோரடங்கிய ஒரு மகாநாடு நடைபெற்றது. இவ்விதக்குற்றம் புரிபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படாமல் சிறைத்தண்டனை விதிக்கும்முறையில் சட்டத்திருத்தம் செய்யப்படும். இப்பிரசுரங்களை எடுத்துச் செல்லும் வாகனங்கள், அச்சடிக்கும் இயந்திரங்கள் ஆகியவையும் பறிமுதல் செய்யப்படும்.

## 'பலவிஷயங்களில் இந்தியாவை பின்பற்றுகிரேம்'

### காலி எம். பி. சலிப்பு

காலி, புதன்

"பல விஷயங்களில் நாம் இந்தியாவையே 'காப்பி' அடிக்கிரேம். இலக்கியத்தின் தரத்தை உயர்த்த வேண்டுமென்று கூச்சலிடும் விஷயத்திலும் கூட இந்தியாவில் ஏற்பட்டுள்ள ஊக்கத்தைக் கண்டே அப்படிச் செய்கிரேம்" என காலி எம். பி. திரு டபிள்யூ. தஹநாயகா இங்கு நடைபெற்ற சாகித்திய சங்கக் கூட்டமொன்றில்பேசிய போது குறிப்பிட்டார்.

"ஒரு நாட்டின் இலக்கிய தரத்தைக் கொண்டே அந்நாட்டின் முன்னேற்றம் மதிப்பிடப்படுகிறது. நம் இலக்கியத்தின் தரம் முன்னேற்றத்தை அடைய 50 வருடங்களுக்கு மேல் ஆகும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

## அரசாங்கத்தின் நிதிநிலைமை சரியில்லை

### டாக்டர் பெரேரா தகவல்

எட்டியாந் தாட்டை, செவ்.

"இன்றைய அரசாங்கம் வரிகளை உயர்த்தியது. இதனுல் இந்த நாட்டின் எளிய மக்கள் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளனர். முன்னிருந்ததைவிட இன்று மக்கள் அதிக கஷ்டப் படுகின்றனர். இது அரசாங்கத்தின் நிதி நிலைமை சரியில்லாததால் ஏற்பட்டுள்ளது" என்று சமஜமாசக்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா தனக்கொலவத்தை சமசமாஜ. வாலிபர் முன்னணிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

வாலிப முன்னணிகளை அமைப்பதன்மூலம் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வத்துவிடலாமென யு. என். பி. நம்புகிறது அவர்களுடைய தவறுன பிரசாரத்துக்கு நாங்கள் ஏமாந்துவிடக்கூடாது.முன்னேற்றத்தையும் சோஷலிஸத்தையும் எதிர்நோக்கிச் செல்கிரேம் என்பதை நினைவில் வைத்து அதன்படி நடந்துகொள்ள வேண்டும்" என்று டாக்டர் பெரேரா கூறினர்.

முற்போக்கான செயல்களைச் செய்வதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குத் திறமை இல்லையாதல் அதன் வேலையைத் தொடர்ந்து நடத்த சமசமாஜக் கட்சி தயாராக இருக்கவேண்டும் என்று டாக்டர் பெரேரா சொன்னர்.

கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் எட்டியாந்தோட்டைப் பகுதியில் 400 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதென்றும் எட்டியாந்தோட்டைத் தொகுதியிலுள்ள நிலமில்லாதவர்களுக்கு நிலம் வழங்குவது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் டாக்டர் பெரேர தெரிவித்தார்.

---

## மாசி திருட்டு!

பலாங்கொட செவ்வாய்

பொலிஸ்நிலையத்துக்குச் சமீபத்திலுள்ள பலாங்கொட கூட்டுறவுச் சங்கக்கடையில் திருடர்கள் புகுந்து 24 ரூபாயையும் 128 ருத்தல் மாசியையும் திருடிச்சென்றுவிட்டனராம்.

# மகாதேவ அடிகளார் கொழும்பில் நினைவுவிழா

கொழும்பு, செவ்வாய்

"எங்கள் நாட்டிலே காலத்துக்குக் காலம் மெய்யடியார்கள் தோன்றி உலகை நல்வழிப்படுத்தியிருக்கின்றனர். அத்தகைய ஒரு சைவப் பெரியாரின் நினைவு விழாவை இன்று பூசை வழிபாட்டுடன் கொண்டாடுகின்றோம்" இவ்வாறு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்ற சுவாமி மகாதேவா நினைவு விழாவுக்குத் தலைமை தாங்கிய உணவு, வர்த்தக, கப்பல், போக்குரத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை கூறினர்.

மகாதேவா அடிகளாரின் திருவுருவப் படத்துக்கு வழிபாடு நடத்தப்பட்ட பின்னர், திரு. சு. சுப்பையா திருமுறை ஓதினர்.

தமிழ்ப் பேராசிரியை ஸ்ரீமதி மகேஸ்வரி மகாதேவா தமக்கு எழுத்தறிவித்த இறைவன் ஸ்ரீமத் மகாதேவ அடிகளாரே எனவும், இன்று அத்தகைய ஒரு தவசீலருக்கு அஞ்சலி செய்வது தமக்குக் கிடைத்த ஒரு பெரும் பேறெனவும் தம உரையிற் குறிப்பிட்டார்.

முதலியார் குல. சபாநாதன் தமது பேச்சிற் குறிப்பிட்டதாவது:-

"மகாதேவ அடிகளார் எங்கள் கிராமத்திலேயே அவதரித்தார்கள். அடிகளாரின் கம்பீரத் தோற்றமும் அப்பழுக்கற்ற உள்ளமும் புன்னகை தவழும் முகமும் சிறு வயதிலேயே எனது உள்ளத்தில் பதிந்துவிட்டன. அவருடைய அமுத மொழிகள் எல்லாம் இன்றும் எனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன."

இதன் பின்னர் இன்னிசைச் செல்வன் திரு. வி. சிவராசாவின் இசைக் கச்சேரி பக்க வாத்திய சகிதம் நடைபெற்றது. குண்டோதர பாகவதரும் அவர் சிஷ்ய வர்க்கமும் 'சைவ மகளிர் பாடசாலை' என்னும் பொருள் பற்றி கதா காலாட்சேபம் நடத்திச் சபையோரை மகிழ்வித்தனர்.

## "சனசமூகவளர்ச்சிக்கு சுயமுயற்சி அவசியம்"

ஊர்காவற்றுறை, நவ. 20

"அரசாங்க நன்கொடைப்பணத்தை மாத்திரம் நம்பியிராது உங்கள் சுயமுயற்சியைப் பயன்படுத்தி சமூக முன்னேற்றத்திற்குப் பணிபுரிய வேண்டும்."

இவ்வாறு வேலணைக்கிராம சபைக் காரியாலயத்தில் சனசமூக நிலையங்களின் வளர்ச்சி பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய உள்ளூர் ஆட்சி விசாரணையாளர் திரு. பரஞ்சோதி குறிப்பிட்டார்.

## தும்புத்தொழில் ஆலைகள் மூடப்பட்டுள்ளன

கொழும்பு, செவ்வாய்

அகில இலங்கைத் தும்புத் தொழில் ஆலைகள் சங்கத்தின் புள்ளிவிபரப்படி வடமேற்கு மாகாணத்தில் நூற்றுக்கு மேற்பட்ட தும்பு ஆலைகள் மூடப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது. தும்பு விலை மிகவும் குறைந்துள்ளதாலேயே தும்பு ஆலைகள் மூடப்பட்டுள்ளன.

தும்பு ஆலைகள் மூடப்பட்டுள்ளமையால், அத்தொழிலில் ஈடுபட்டு வந்த ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளார்கள். சில தும்பு ஆலைகளில் ஒரு கிழமையில் இரண்டு அல்லது மூன்று தினங்களே தொழிலாளர் வேலைசெய்வதுண்டு. இலங்கையிலுள்ள ஐம்பதினயிரம் மக்கள் தும்புத்தொழிலில் ஈடுபட்டுவருகிறார்கள்.

## முத்தமிழும் பண்டைநிலை பெறவேண்டும்

### யாழ். மேயர் பேச்சு

யாழ்ப்பாணம், புதன்

'நாடகத் தமிழ் பண்டை நிலையை மீண்டும் பெறுவதற்கு நாம் அயராது உழைக்கவேண்டும். சிறந்த நாடகக் கலையையும், கலைஞர்களையும், இசைவல்லுனர்களையும் ஆக்குவதற்கு நாடககங்கள் வழிகோலும். முத்தமிழும் வளர்ச்சிபெற வகைகள் செய்யவேண்டும். இன்னிசையால் உலகெலாம் கட்டியாண்ட தமிழன் நிலை மீண்டும் புத்துயிர்பெற கலைஞர்கள் சமூகத்தில் நற்சேவையாற்ற வேண்டும்."

இவ்வாறு யாழ்ப்பாணம் மேயர் திரு. டி. எஸ். துரைராசா அண்மையில் யாழ்ப்பாணம் ஸ்ரீ சரவணபவா நாடக அரங்கில் நடைபெற்ற "மனம் போல்வாழ்வு" என்ற சமூக சீர்திருத்த நாடகத்துக்கும் ஸ்ரீமதி மோகனவின் இசைக் கச்சேரிக்கும் தலைமைவகித்துப் பேசும்போது கூறினர்.

'மனம்போல்வாழ்வு' என்ற நாடகத்தின் காட்சிகளையும் பின்னணியையும் பலரும்பாராட்டிப் பேசிக்கொண்டனர்.

# புத்தரின் இலங்கை விஜயம் வெறும் புராணக் கதைகளே!

## இதுபற்றி வித்தியோதய பேராசிரியர் சவால்

மகாரகம, செவ்வாய்

பேராதனைப் பல்கலைக் கழகச் சரித்திரத்துறைப் பேராசிரியர் டாக்டர் சேனரத் பரணவித்தான, புத்தரின் இலங்கை விஜயம் பற்றிய கதைகளெல்லாம் வெறும் புராணக் கதைகளே என்றும், புத்தர் இங்கு வந்ததற்குச் சரித்திரபூர்வமான அத்தாட்சி எதுவுமில்லையென்றும் அண்மையில் கூறியிருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். டாகடர் பரணவித்தான வேண்டுமானல் தமது கருத்துக்கு ஆதாரம் காட்டி நிருபித்துக் காட்டுவாரா? என வித்தியோதயப் பல்கலைக் கழகப் பேராசிரியரான, வணக்கத்துக்குரிய கலுகொண்டயாவே பன்னசேகரா டாக்டர் பரணவித்தானவை அறைகூவிக் கேட்டுள்ளார்.

பொரளையில் நடைபெற்ற ஞாபகார்த்த கூட்டமொன்றில் பேசுகையில் வணக்கத்துக்குரிய பன்னசேகரா தேரோ டாக்டர் பரணவித்தானவின் கருத்துக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டார். பன்னசேகரதேரோ கூறியதாவது:-

"கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் டாக்டர் பரணவித்தான புத்தரின் இலங்கை விஜயம்பற்றிக் குறிப்பிட்டாராம். புத்தரது இலங்கை விஜயம் பற்றிய கதைகளெல்லாம் வெறும் கட்டுக் கதைகளென்றும், அக்கதைகள் சரித்திர உண்மைகளல்ல என்றும் அவர் கூறினாராம். புத்தர் இலங்கைக்கு ஒருபோதும் வரவில்லை என்று சும்மா கூறிவிட்டால் மட்டும் போதாது. டாக்டர் பரணவித்தான தமது கருத்தின் உண்மையை நிருபித்தும் காட்ட வேண்டும்."

## உணவுக் குற்றச் சாட்டு இன்று விசாரணை

மாஸ்கோ, நவ. 21

உளவு பார்த்ததாகக் குற்றம் சாட்டிக் கைது செய்யப்பட்ட இரு மேற்கு ஜெர்மனியர்கள் மீதும் நாளை மாஸ்கோ சுப்ரீம்கோர்ட்டில் விசாரணை நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணையை பார்ப்பதற்கு மேற்கு நாடுகளின் நிருபர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

# சாசனக் கமிஷன் அறிக்கையில் மாற்றம் அவசியமா?

## உபகமிட்டியை ஆராயும்படி அமைச்சர் வேண்டுகோள்

கொழும்பு, புதன்

பௌத்த சாசனக் கமிஷனின் அறிக்கையை அமுல் செய்வதற்குப் பலர் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர். கமிஷனின் சிபார்சுகளில் எதுவித மாற்றமும் செய்துகொள்ளலாமா என ஆலோசனை செய்வதற்கென சாசனக் கமிஷனின் உபகமிட்டியை இம்மாதம் 29ம் திகதி ஒரு கூட்டம் கூடும்படி உள்நாட்டமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா கேட்டுள்ளார்.

சாசனக் கமிஷனின் அறிக்கையை அமுல்செய்வதுபற்றி உள்நாட்டமைச்சருடன் பௌத்த ஆலோசக கமிட்டியின் தூதுகோஷ்டியொன்று அண்மையில் ஆலோசனை நடத்தியது. அச்சமயம் பௌத்த சங்கத்துடனும் பௌத்த மக்களுடனும் கலந்தாலோசனை செய்யாது அரசாங்கம் சாசனக் கமிஷனின் அறிக்கையை அமுல்செய்யமாட்டாது என உள்நாட்டமைச்சர் பௌத்த ஆலோசக கமிட்டியின் தூதுகோஷ்டிக்குக் கூறியிருந்தார்.

சாசனக் கமிஷனின் அறிக்கையை அமுல்செய்யமுன்னர் பௌத்த சங்கத்தின் கருத்துக்களையும், பௌத்த மக்களின் கருத்துக்களையும் அரசாங்கம் நன்கு ஆராய்ந்தறியுமென உள்நாட்டமைச்சு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

சாசனக் கமிஷனது சிபார்சுகள் சில பௌத்த விநாய விதிகளுக்கு மாறானவை ஆகையால் பௌத்த சங்கத்தின் ஒருசாரார் சாசனக் கமிஷன் அறிக்கை அமுல்செய்வதற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள்.

## கள்ளக்குடியேற்றக்காரருக்கு புகலிடம் கொடுத்தார்

### ரூ. 1000 பிணையில் செல்ல அனுமதி

மாவிட்டபுரம், புதன்

மாதகலைச் சேர்ந்த கதிரவேலு கோவிந்தசாமிஎன்பவர் சட்டவிரோதமாக 24 கள்ளக் குடியேற்றகாரருக்குப்புகலிடம் கொடுத்ததாகக் குற்றஞ்சாட்டி சங்கானைப் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்டவழக்கில் எதிரி தான் சுற்றவாளியெனவே நீதிபதி எதிரியை (1000) ஆயிரம் ருபா பிணையில் செல்லும்படியும் ஜனவரி 1ம்திகதி கோர்ட்டிட்கு வரும்படி கட்டளையிட்டார்.

இன்ஸ்பெக்டர் திரு. கே குமார் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

## கைதுசெய்ய வாரண்ட்

மாவிட்டபுரம், புதன்

சங்கானைப் பொலிசாரால் தேடரப்பட்டுவரும் கணபதி பாலச்சந்திரன் என்பவர் பொலிசாரிடம் அகப்படாமல் தலைமறைவாகத் திரிவதாகச் சங்கானைப்பொலிசார் நீதிபதியிடம் தெரிவிக்கவே நீதிபதி அவரைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பித்தார்.

# கூட்டு உடன்படிக்கை 24-ந் திகதி அங்கீகாரம்?

கொழும்பு, புதன்

இலங்கைத் தொழிலாளர் சம்மேளனமும் இலங்கை வர்த்தக சங்கமும் தம்மிடையே செய்துகொள்ளும் கூட்டு உடன்படிக்கைக்கு டிசம்பர் முதலாம் திகதியளவில் கைச்சாத்திடப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

உடன்படிக்கையின் விவரங்கள் சம்மேளன அங்கத்தவர்களால் இம்மாதம் 24ம் திகதி பார்வையிடப்பட்டு அங்கீகரிக்கப்படும் எனத் தெரிகிறது. சம்மேளனத்தில் அங்கத்துவமுள்ள வர்த்தகத் தொழிலாளர் 10,000 பேரும் இந்த உடன்படிக்கையினல் அதிக லாபமடைவார்கள். சம்மேளனத்தில் அங்கத்துவமில்லாத கம்பனிகளும் உடன்படிக்கையின்படி நடந்துகொள்வார்கள் எனத் தெரிகிறது.

சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் வர்த்தக சங்கப்பிரதிநிதிகளுக்குமிடையே உடன்படிக்கைபற்றிய பேச்சுவார்த்தைகள் சென்றமாதம் நடைபெற்றன.

## கடாங்காவுக்கு ஜெர்மன் உதவி

### தூதராலயம் மறுப்பு

கொழும்பு, செவ்வாய்

கடாங்காவுக்கு உதவி புரிய மேற்கு ஜெர்மன் அரசாங்கம் விமானங்கள் அனுப்பியதாக இலங்கைப் பத்திரிகைகள் சிலவற்றில் வெளியான செய்தியை இலங்கையிலுள்ள மேற்கு ஜெர்மன் தூதராலயம் இன்று மறுத்தது.

ஐக்கிய காங்கோதான் ஜெர்மனியின் கொள்கையென்றும் காங்கோ பிரிவினையை ஜெர்மன் குடியரசு ஒருபோதும் ஆதரிக்கவில்லையென்றும் தூதராலயம் தெரிவித்தது.

கடாங்காவுக்கு ஆயுதமோ போர் சாதனமோ ஜெர்மனி ஒருபோதும் வழங்கியதில்லையென்று அது கூறியது.


RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

ஏகோத்த விற்பனை விநியோகஸ்தர்கள்:
- மில்லஸ்ர் லிமிட். கொழும்பு.
- எம். கே. ஏ. ஹமீது அன் கோ, குருணகலை.
- என். எச். குமாரசிங்க அன் கோ, காலி.
- கபூர்ஸ் ஹார்ட் வெயார், இரத்தினபுரி.
- யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம்
- எச். ஏ. பகல் ராவல அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். கே. பீட்டர் அப்பு அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். ஏ. செல்வநாயகம் அன் சன்ஸ் மட்டக்களப்பு.

பன்மடங்கு சிறந்த பாட்டரி இதுவே
பலமணித்தியால அதிக உத்தரவாத சேவை
யளிப்பதும் இதுவே

சக்தி பலம்




முன்னெப்பொழுதையும் விட எவ்வளவோ முன்னேற்றம்!

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

## ரேடியோ நிகழ்ச்சிகள்

**கொழும்பு**

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.

**வியாழன் 23-11-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 கோட்டு வாத்தியம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 சதம்ப இசை

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை' 6-45 வயலின்.

இரவு 7-00 தமிழ்முலம் சிங்களம்-9, 7-15 நேயர் விருப்பம், 7-45 டாக்டர் இரஞ்சிதம்—தொடர்நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 குரல் இசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

**திருச்சி**

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-46 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 மதுரை பி. எம். வேங்கடகிருஸ்ணன்-பாட்டு,

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 பி. எம். வேங்கடகிருஷ்ணன்-பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவித பாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப்பாடல், 7-35 'மனமும் நாமும்'-பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி ராமநாதபுரம் கிருஷ்ணன்-பாட்டு, 8-40 திரைப்பட இசை, 9-30 அகில பாரத சித்திரம், 10-00 சென்னை அஞ்சல்.

## கோமாரியில் பிரம்புத் தொழில் நிலையம்

அக்கரைப்பற்று, செவ் கோமாரி என்னும் கிராமத்தில் நடப்புவருட முதல்மாதத்தில் ஒரு பிரம்பு தொழிற்சாலை திறந்துவைக்கப்படவிருக்கிறது.

இத்தொழிற்சாலை நடைமுறைக்கு வந்தால் கோமாரிப் பகுதியில் குடிசைக் கைத்தொழில் விருத்தி அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# பொலிசார் பதிவுக்கொப்பிகளை கொடுக்கவில்லை என எதிரிதரப்பு வழக்கறிஞர் புகார்

### உத்தரவிடப்போவதில்லையென நீதிபதி தெரிவித்தார்

மாவிட்டபுரம், புதன்

அக்டோபர் மாதம் 14 ம் திகதி புன்னாலைக்கட்டுவனிலுள்ள பல வீடுகளில் 2000 ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடியதாக தையிட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் பொன்னுச்சாமி, மாத்தறையைச் சேர்ந்த சைமன் வியனகேராசா ஆகிய இருவர்மேலும் சுன்னுகப் பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சில பதிவுக்கொப்பிகளைப் பொலிசார் கொடுக்கத் தவறியதன் காரணமாகத்தான் வழக்கை ஆயத்தம் செய்யவில்லை என்றும் ஆதலால் வழக்கை ஒத்திவைக்கவேண்டுமெனவும் 2-ம் எதிரி சார்பில் ஆஜரான திரு. ரி. கணேசலிங்கம் நீதிபதியைக் கேட்டுக்கொண்டார்.

இதுபற்றி திரு. ரி. கணேசலிங்கம் நீதிபதியிடம் தெரிவிக்கையில் இவ்வழக்கில் பொருட்களைப் பறிகொடுத்தவர்கள் முறைப்பாட்டின் பதிவுக்கொப்பிகளைத்தான் தரும்படி, பொலிசாருக்கு மனுச் செய்ததாகவும் அதற்கு பொலிசார் மறுத்துவிட்டதாகவும் நீதிபதியிடம் தெரிவித்தார்.

இப்பதிவுக் கொப்பிகளைப் பொலிசாரிடமிருந்து பெறுவதற்கு எதிரி தரப்பு வழக்கறிஞருக்கு உரிமை இருக்கிறதென்றும் அவ்வுரிமையைப் பொலிசார் மறுப்பதால் அப்பதிவுக் கொப்பிகளை எங்களுக்கு வினியோகிக்கும்படி பொலிசாருக்கு கட்டளையிட நீதிபதிக்கு அதிகாரமுண்டென்றும் அவ் அதிகாரத்தை உபயோகித்து பதிவுக்கொப்பிகளைப் பெறுவதற்கு உத்தரவிடும்படி கேட்டுக்கொண்டார்

பதிவுக் கொப்பிகளை பெறுவதற்கு எதிரி தரப்பு வழக்கறிஞர் அதற்குரிய மேலதிகாரிகளுக்கு மனுச் செய்ய வேண்டுமென்றும்தான் பொலிசாருக்கு பதிவுக் கொப்பிகளைக் கொடுக்கும்படி உத்தரவிடப்போவதில்லை என்றும் தெரிவித்த நீதிபதி வழக்கை அடுத்தமாதம் 7 ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

### விளையாடாமலும் வெற்றிபெறலாம்

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை றேயல் விளையாட்டுக் கழகக் கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் கீழ் மாதகல் சென்தோமஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் காங்கேசன்துறை ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகத்திற்குமிடையேநடைபெறவிருந்த கைப்பந்தாட்டப் போட்டிக்கு ஸ்புட்னிக் கழகம் சமுகமளிக்காமையால் சென்தோமஸ் விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றிகொடுக்கப்பட்டது.

## இரண்டாயிரம் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுவர்

கொழும்பு, செவ்வாய்

டிசம்பர் விடுமுறைக்குப் பாடசாலைகள் மூடப்படுவதற்கு முன்னர் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்படவிருக்கின்றன.

புதிய பாடசாலைத் திட்டத்தின் அடிப்படையில் இடமாற்றங்கள் இறுதியாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த இடமாற்றத்தின்படி கணவனும் மனைவியும் ஆசிரியர்களாக உள்ளவர்கள் ஒரே பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்படுவர்.

பிற்போக்கான நிலையிலுள்ள பகுதிகளில் சேவை செய்யும் மணமாகாத ஆசிரியைகள் வசதிகளுள்ள இடங்களுக்கு மாற்றப்படுவர்.

இந்த இடமாற்றங்கள் ஜனவரி மாதம் அமுலுக்குவரும்.


## நான் விரும்புவது

# நெஸ்டோமோல்ட்

அது எனக்கு
எவ்வளவோ
நன்மையளிக்கின்றது...






நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம், ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 யேனைதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

## நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரோடக்ட்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்
த. பெ. 189,
கொழும்பு.

குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

# நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது

## 30, 40 அடிதூரத்தி...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

மில்லை என்று அவர் சொன்னார்.

"எனவே 30 அல்லது 40 அடி தூரத்திலிருந்து சுடப்பட்டிருக்கிறதென்றே நான் கூறுவேன். செல்லையாவின் காயத்தைச்சுற்றி எரிவு அடையாளமெதுவும் இருக்கவில்லை என்று திரு. சண்முகம் கூறினார்.

பத்து அடி தூரத்திலிருந்து தாம் சுட்டதாக அர்ஜேலிஸ் கூறியதையும் தாம் நிரரசரிப்பதாகத் திரு. சண்முகம் தெரிவித்தார்.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில் செபஸ்தியனின் காயத்திலிருந்து 30 அல்லது 40 அடி தூரத்திலிருந்தே சுடப்பட்டிருக்கவேண்டுமென்றே தான் கருதுவதாகக் கூறினர்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. சாம் விஜயசிங்கா குறுக்கு விசாரணை செய்தபோது திரு- சண்முகம் தெரிவித்ததாவது:-

சில துப்பாக்கி ரவைகள் 30 அல்லது 40 அடி தூரத்திலிருந்து சுடப்பட்டால் உடலில் நுழையமாட்டாது. கடினமான உடையணிந்திருந்தாலும் துப்பாக்கி ரவைகள் நுழைவது சிரமம்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மீண்டும் சாட்சியை விசாரணை செய்தபோது 30 அல்லது 40 அடி தூரத்திலிருந்துதான் அச்சூடுகள் சுடப்பட்டிருக்கின்றன வென்றும் காவற்காரருக்கும் கூட்டத்தினருக்கும் இடையில் எவரும் நின்றிருக்க முடியாதென்றும் திரு சண்முகம் தெரிவித்தார்.

## அதிகாரிகளுக்கு தலையிடி

கொழும்பு, புதன்

மகாவிலாச்சியா குடியேற்றத்திட்டத்திலுள்ள குடியேற்ற வாசிகளும் அவர்களது நாய்களும் வில்பத்து தேசிய வனவிலங்குப் பாதுகாப்பு அதிகாரிகளுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளனர்.

# ரஷ்யாவில் உளவு பார்த்தனராம்

## இரு ஜெர்மன் வாலிபர் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்

மாஸ்கோ: நவ.22

அமெரிக்காவுக்காக ரஷ்யாவில் உளவுபார்த்த குற்றத்தை இரு மேற்கு ஜெர்மன் இளைஞர்கள் இன்று ஒப்புக்கொண்டனர்.

22 வயதான பொன்டாக் என்பவர் மீதும் 26 வயதான நியூமன் என்பவர்மீதும் உளவு பார்த்த குற்றச்சாட்டின்மீது இன்று மாஸ்கோசுப்ரீம்கோர்ட் கட்டடத்தில் மூன்று நீதிபதிகள் முன்னிலையில் விசாரணை ஆரம்பமானது.

குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டு முடிந்ததும் தாங்கள் அமெரிக்காவுக்காக உளவுபார்த்ததாக அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

இக்குற்றத்திற்கு ஏழுவருடத்திலிருந்து 15 வருடம் வரை சிறைத்தண்டனை அல்லது மரண தண்டனை கிடைக்கும்.

உல்லாசப் பிரயாணிகள் என்ற போர்வையில் ரஷ்யாவில் உளவுபார்த்துவிட்டுவெளியேறும் சமயத்தில் இவர்கள் உக்ரேனில் சுங்க அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டனராம்.

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின்
மகத்தான வெளியீடு!
24-ந் திகதி வெள்ளி முதல்
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)



நாகேஸ்வர ராவ், அஞ்சலிதேவி, பாலையா
நடித்த
எங்கள் செல்வி

கிங்ஸ்லி (கொழும்பு)
சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன் நடித்த
பதிபக்தி

மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30
அஞ்சலிதேவி, ஜெமினி கணேசன்
நடித்த
மணாளனே மங்கையின் பாக்கியம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ராமச்சந்திரன் மாதுரிதேவி
நடித்த
மந்திரிகுமாரி

## பொலிஸ்காரர் மீது அஸிட் வீசியதாக வழக்கு

### சந்தேக நபர்கள் பிணையில் செல்ல அனுமதி

மாவிட்டபுரம், செவ்வாய்

காங்கேசன் துறைப் பொலிஸ் கான்ஸடபிள் மகேந்திரசிறி மீது அசிட் வீசியதையொட்டி சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சுன்னாகம் பொலிஸ கான்ஸடபிள் விக்கிரம சுந்தரா காங்கேசன் துறை பொலிஸநிலைய சமையல்காரன் ஏ. ஜெயசேன ஆகிய இருவரையும் காங்கேசன் துறைப் பொலிசார் இன்று மல்லாகம் நீதிபதி முன் ஆஜர் செய்தபோது நீதிபதி திரு. வெஸலிடி. தாமோதரம் இரு சந்தேக நபர்களையும் தலா ஆயிரம் ரூபாய் பிணையில் செல்லும்படியும் அடுத்தமாதம் 12-ம்திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் சார்பில் திரு. வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் ஆஜரானர்.

## நிருபர்கள் விசாரிக்கப்படவில்லை

கொழும்பு, புதன்

பண்டாரநாயக்கா கொலை வழக்கு அப்பீல் நீதிமன்றத்தில் இன்று விசாரணை செய்யப்படுவதாக இருந்த பத்திரிகை நிருபர்கள் நால்வரும் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.

புத்தரக்கித்தாவின் கனிஷ்ட வழக்கறிஞர் திரு. ஈ. ஏ. ஜி. டி. சில்வாவின் மூலக்குறிப்பில் கொலைவழக்கு விசாரணையின் போது தமது ஆரம்ப உரையில் "ஆபாச இலக்கியம்" பற்றிக் குறிபபிட்டதாக இருக்கிறதென்று வழக்கறிஞர் திரு. ஜி. ஈ. சிட்டி ஒப்புக்கொண்டதன் காரணமாக நிருபர்கள் இன்று விசாரிக்கப்படவில்லை.

## பாலில் தண்ணீர்!

### ரூ. 150 அபராதம்

யாழ்ப்பாணம், புதன்

தண்ணீர் கலந்த பசுப்பால் வைத்திருந்ததாக யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியைச் சேர்ந்த மாயாண்டி செல்லத்துரை என்பவர் மீது குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் மாநகரசபை உணவுப் பகுதி இன்ஸ்பெக்டர் திரு. எஸ். ஆறுமுகம் தொடர்ந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிபதி திரு அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதி எதிரிக்கு 150 ரூபாய் அபராதம் விதித்தார்.

## சர்வதேச ஒத்துழைப்பு ஆண்டுகொண்டாடுக

### ஐ. நா. வுக்கு சிபார்சு

நியுயார்க், நவ. 21

சர்வதேச ஒத்துழைப்பை வளர்க்கும் வருஷம் ஒன்றை ஐ. நா. வின் ஆதரவில் கொண்டாட வேண்டுமென்ற பிரேரணையைப் பொதுச் சபையில் விவாதிக்க வேண்டுமென்று ஆயத்தக் கமிட்டி இன்று சிபார்சு செய்தது.

# ரப்பர் ஏற்றுமதி வரி விதிப்பில் மாறுதல்

## லண்டன் விலைக்கேற்ப நிர்ணயிக்கப்படும்

கொழும்பு, புதன்

அடுத்தவாரம் ரப்பர் ஏற்றுமதி சம்பந்தமான வரி விதிப்பு மாறுதலடையும். நவம்பர் 26-ந் திகதி முதல் அமுலாகும் இந்த வரிவிதிப்பின்படி, லண்டனில் ஷீட் ரப்பரின் விலைக்கேற்ப ராத்தலுக்கு 14 சதம் ஏற்றுமதி வரி விதிக்கப்படும். கடந்த சில காலமாகவே அரசாங்கம் இதுபற்றிப் பரிசீலனை செய்துவந்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது. ரப்பர் கட்டுப்பாட்டதிகாரியின் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு கமிட்டியின் சிபார்சுப்படியே அரசாங்கம் இந்த முடிவுக்கு வந்ததாகக்கூறப்படுகிறது. தோட்ட முதலாளிமார் பிரதிநிதிகள் இதுசம்பந்தமாக மந்திரியைக் கண்டுபேசினர்.

## உலகில் உஷ்ண சகாப்தம் மாறுகிறது!

வாஷிங்டன், நவ. 21

இந்நூற்ருண்டின் துவக்கத்தில் உலக வானியலில் தோன்றிய "உஷ்ண நிலை" அடுத்த நான்கு குளிர்காலங்களில் தற்காலிகமாகப் பின்னடையக் கூடுமென்று தேசிய பூகோளச்சங்கம் அறிவித்தது. ஆனல் நிதானமான உஷ்ண நிலை மீண்டும் 1965-ல் தலைகாட்டும் என்றும் தெரிவித்தது.

வட கோளார்த்தப் பகுதியில், 1900 வருட முதல் உஷ்ண நிலை சுமார் ஒரு டிகிரி வீதம் உயர்ந்து வந்தது. இவ்வுஷ்ண நிலை பரவியதன் விளைவாக "காட்" மீன்கள் வடக்கில் வெகு தூரம் சென்றன; எஸ்கிமோககளின் முக்கிய உணவாகவும் ஆகிவிட்டது. ஒரு காலத்தில் உஷ்ணமண்டலத்தில் மட்டுமே காணப்பட்ட ஒருவகை மீனினம் நியூஜெர்ஸிக் கரையோரங்களிலும் வரத்தொடங்கிவிட்டது.

## இலங்கையில் 'பல்ப்' தொழிற்சாலை

### வருடமொன்றுக்கு 20 லட்சம் பல்ப் தயாரிக்கும்

கொழும்பு, புதன்

கொழும்பு பொரளையில் மின்சார பல்ப் தொழிற்சாலையொன்றை கைத்தொழில் உள்நாட்டுக் கலாச்சார மத்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா இன்று பிற்பகல் ஆரம்பித்துவைத்தார்.

தனியார் தொழிற்சாலைகளுக்கு அரசாங்கத்தின் உதவி என்றும் கிடைக்கும் என மந்திரி தொழிற்சாலையை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

வருடமொன்றுக்கு 20 லட்சம் பல்புகளை இத் தொழிற்சாலை தயாரிக்குமென அறியப்படுகிறது.

கொழும்பு, புதன்

இலங்கையிலுள்ள காட்டு யானைகளின் புள்ளிவிபரக் கணக்கெடுப்பு அடுத்தமாதம் நடைபெறவிருக்கிறது. வனவிலங்கு இலாகா இக்கணக்கெடுப்பை நடத்தும். சிலவருடங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட கணக்கின்படி இலங்கையில் சுமார் ஆயிரம் யானைகள் இருப்பதாக அறியப்பட்டது.

## விளக்குகள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குகள் பலபல இருக்கலாம்; ஆனல் வெளிச்சம் என்பது ஒன்றேதான்.

ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையிலே குரு நானக் போன்ற பெரியோர்களின் உபதேசத்தைப் பின்பற்ற வேண்டும். ஏனென்ருல் நாம் வெறும் பேச்சினலன்றி நமது நடத்தையின்மூலமே மதிக்கப்படுவோம்.

# 43 தடவைகள் வெளிநாட்டுப் பயணம்

## மந்திரிகள் எம். பி.க்கள் பற்றி பிலிப் கண்டனம்

யக்கலை, புதன்

"டாக்டர் என். எம். பெரேரா தற்போதைய பிரபுத்வ அரசாங்கத்திற் கெதிராக தெளிவான முறையில் அறிக்கை வெளியிட முடியாத நிலையில் இருக்கிருர். கம்யூனிஸ்டுகளும், லங்கா சமசமாஜிகளும் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தை ஆதரிக்கிருர்கள்" என கம்பஹாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் திரு. பிலிப் குணவர்த்தன கூறினர்.

"பின்கதவு வழியாகவே ஸ்ரீமதி பண்டாரநாயக்கா பதவிக்கு வந்தார். பதவிக்கு வந்தவுடனேயே அவர், மந்திரிகளும் எம். பி. க்களும் வெளிநாடு சென்று பொதும்பணத்தைச் செலவழிப்பது பற்றி எச்சரித்தார். ஆனல் அவருடைய பதவி காலத்தில் 43 தடவைகள் மந்திரிகளும், எம். பி. க்களும் வெளிநாடு சென்றிருக்கின்றனர்.

பிரதமரை நான் குற்றங்கூறவில்லை. ஏனெனில் அவருக்கு அரசியலில் அனுபவமில்லை. ஆனல் அவரைச்சுற்றியுள்ள (லங்கா சமசமாஜ, கம்யூனிஸ்ட் உட்பட) மந்திரிகளும் எம். பி. க்களும் தான் இந்த நிலைமைக்குக்காரணம். முதலாவது பெண் பிரதமராக வந்த ஸ்ரீமதி பண்டாரநாயக்கா, இந்நாட்டில் பெண்களுக்கு உரிய ஸ்தானத்தை அளிக்கவில்லை" என்றும் அவர் கூறினர்.

## பிரதமரின் சமாதி மீது ஏறினர்!

கம்பஹா, புதன்

கொழும்பைச் சேர்ந்த கே. ஏ. பிரான்ஸிஸ் என்பவர், காலஞ்சென்ற பிரதமரின் சிரார்த்ததினத்தை முன்னிட்டு ஹொரகொல்லைக்கு வந்தார். அப்போது மாலை 7 மணி. குடிவெறியிலிருந்த அவர் பிரதமரின் சமாதி மீது ஏறினர். அவரைக் கீழே இறங்கச் சொன்ன பொலிஸ் கான்ஸ்டபிளை அவர் அறைந்ததாயும் கூறப்படுகிறது. முடிக்குரிய செலவுக்காக ரூ 20 செலுத்துமாறு அவருக்கு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். அவர் கான்ஸ்டபிளிடம் மன்னிப்பும் கேட்டுக்கொண்டார்.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் மனோகரா ஜெமினி கணேசன் நடித்த மணாளனேமங்கையின்பாக்கியம்

•

யாழ்ப்பாணம் வெலிங்டன் எம். ஜி. ராமச்சந்திரன் நடித்த மந்திரிகுமாரி

•

சாவகச்சேரி தேவேந்திரா: ரஞ்சன் நடித்த கமாண்டர்.

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலைவீதி '63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.